# விவிலிய வினாடி வினா
## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

L.T. மேரி CIC, குயின்மேரி CIC – மதுரை; விமலி ஈசாக் FIHM, சூசை இன்பான்டா OSM, ரெஜினா மேரி FIHM – திருச்சி; பொலன்ஷியா OSM – நெல்லை; எமரென்ஸ் மேரி OSM, மிரியம் CIC – திண்டுக்கல்; லூர்து மேரி CIC, மேரி செசாரியா SSAM, ஹில்டா SJC, ஐசிந்த் SJC – சென்னை; ரொமானா OSM – நாகர்கோவில்; அல்போன்ஸ் - திருமங்கலம்; ரூபெல்லா OSM, லாசரிற்றாமேரி OSM, கரோலா மேரி OSM, அமபெல் மேரி OSM, ஆக்னஸ் ரோசாள் OSM - தூத்துக்குடி; செலின் SJC, சின்னராணி SJC – அணிலாடி; லோரா மேரி – பிரகாசபுரம்; மார்கரேட்மேரி SJC – திண்டிவனம்; ஸ்விட்பெர்ட்டா மேரி OSM – தருவைக்குளம்; யூக்கரியா – அச்சரப்பாக்கம்; சீரோன் - திசையன்விளை; ஜெயமேரி CIC – ஆத்தூர்; ஜோசப்பிட்டா மேரி, மேரி எபிபானி FBC, ஜூ லியானா FBS – தஞ்சாவூர்; சுஜிதா FBS, ராணி FBS – திருவண்ணாமலை; கொன்சிலியா SJC – செய்யூர்; ஜெயா FSJ – மையனூர்.

**பொதுநிலையினர்**

லீமா தெரஸ், பாத்திமா, சந்தனம், செலின்மேரி, ஜான் ஜோசப், ஆனி பீட்டர் ராஜ், இமாக்குலேட் சோபியா, கிளாரா லூர்து மேரி – திருச்சி; புஷ்பக்கண்ணு – கோவை; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா, மார்கரேட் பெல்சியா, ஜோஸ்பின்மேரி, ஆரோக்கிய கிறிஸ்டி அனிட்டா – திண்டுக்கல்; பிரான்சிஸ் அலாய்சியஸ், பிரான்சிஸ் பேசில், சரோஜினி செசிலியா, ஜெயசீலி சாமுவேல் - சென்னை; இருதயராஜ், வெர்ஜின் லூயிஸ், லதா தாஸ் - திருநெல்வேலி; லூர்து இருதயசாமி, மரிய தெரஸ், மரிய ஜோசப் – மயிலாடுதுறை; ஆண்டோ அவிவா - திருப்பத்தூர்; சகாயராஜன் - ராமநாதபுரம்; நிக்கோலாஸ் – புதுக்கோட்டை; அந்தோணியம்மாள் சேவியர் – வேலூர்; அடைக்கலமேரி – செல்லியன்பட்டி.

குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

***சகோ. ரெஜினா மேரி FIHM – திருச்சி***

***திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ் – சென்னை***

**Owned and Published by Fr. A. CHINNAPPARAJ, OSM from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. A. CHINNAPPARAJ OSM.**





## பதிப்பாசிரியர் பக்கம்



# விவேகம்

அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச.,
ஜோதி மாதா ஆலயம், சென்னை.

**இறைஇயேசுவில் அன்புநிறை அன்னைமரி பக்தர்களே!**

மனிதர்களாகிய நாம் அனைவரும் நம் வாழ்வில் பல நற்பண்புகளைக் கடைபிடித்து வருகின்றோம். அவற்றில் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுபவை 1) தன்னடக்கம் 2) விவேகம் 3) நீதி 4) துணிவு (Temperance, Prudence, Justice and Fortitude) (சாஞா. 8:7) போன்றவையாகும். இத்தகைய நற்பண்புகள் ஒரு மனிதனை நல்லொழுக்கத்தில் சிறந்து விளங்கச் செய்கின்றன. இவையனைத்து நற்பண்புகளையும் ஒருவன் தன்னகத்தே கொண்டு வாழும்போது ஞானமுள்ளவனாக, இவ்வுலகில் சிறப்பானவனாக, ஆண்டவரின் ஆசி பெற்றவனாக, வெற்றிகளை உரித்தாக்குபவனாக இருக்கின்றான். இந்த நான்கு தலையாய நற்பண்புகளைத் தவிர வாழ்வில் மனிதருக்குப் பயனுள்ளவை வேறு ஒன்றுமில்லை.

மேற்கூறிய நான்கு தலையாய நற்பண்புகளையும் அன்னை மரியா தன்னகத்தேக் கொண்டு வாழ்ந்திருந்தாலும் அதில் மிகவும் அதிகமாக அவருக்கு பேசப்படுவது 'விவேகம்' ஆகும். இதை மாதாவின் மன்றாட்டு மாலையில் 'மகா புத்தியுடைத்தான கன்னிகையே' (Virgin most Prudent – *Virgo Prudentissima*) என்று அன்னையை விவேகமுள்ளவராக பாவித்து மன்றாடுகின்றோம். ஒரு மனிதனுக்கு எது சரி, எது தவறு என்று ஆய்ந்து அறிகின்ற பகுத்தறிவையும், சூழலுக்கு ஏற்ப வரும் பயனை அறிந்து தெளிவு காணவும் விவேகம் என்ற பண்பானது பயன்படுகின்றது.

பல நேரங்களில் நாம் அனைவரும் விவேகமுள்ளவர்களாக (சிந்தித்து) செயல்படாமல் இவ்வுலகப் போக்கில் வேகமாக (உடனடியாக) செயல்பட்டு வருகின்றோம். ஆனால், அன்னை மரியா தன் வாழ்வில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் எவ்வாறு விவேகமுள்ளவராக சிந்தித்து செயல்பட்டார்

உள்ளே...

| | |
|---|---|
| மனுக்குல மாண்பு மரியா | - 05 |
| புனிதர்களின் தோழமையில் மரியா | - 08 |
| பாவிகள் எங்களுக்காக இப்பொழுதும்......... | - 11 |
| திருத்தந்தையின் தேவ தாய்ச் சிந்தனைகள் | - 15 |
| மாதாவின் சஞ்சலங்கள் | - 18 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 20 |
| விவிலிய வினாவிடை | - 26 |
| அன்னை மரியாவின் திருப்பயணங்கள் | - 28 |
| நாமும் ஒரு நாள் | - 31 |

என்பதற்கு ஒருசில உதாரணங்கள். கபிரியேல் தூதர் மரியாவுக்கு மங்கள வார்த்தை சொன்னபோது, 'அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக்கொண்டிருந்தார்' (லூக் 1:29); மேலும், 'இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!' (லூக் 1:34) என்று முதலில் உள்ளம் கலக்கமுற்றவராகவும் பின்பு தன்னையே தெளிவுபடுத்திக்கொள்ளவும், இறைவனுடைய மீட்புத்திட்டத்தில் தன்னை முழுமையாக அர்த்தமுள்ள விதத்தில் ஈடுபடுத்திக் கொள்ளவும் மேலும் விபரங்களை வானதூதரிடம் கேட்டறிகின்றார். இந்த கேள்விக்கு வானதூதரின் பதிலையும் இறைவாக்கினர்கள் மெசியாவைப்பற்றி முன்னறிவித்ததையும் ஒப்பிட்டுப் பார்த்து தம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை மெசியாதான் என்று உறுதியாக தனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்று விவேகத்துடன் தனது பதிலை, 'நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' (லூக் 1:38) என்று கூறி தருகிறார்.

இயேசுவை மூன்று நாள் கழித்து கோவிலில் கண்டபோது தாழ்ச்சியும் தாய்மை உள்ளமும் கொண்டவராக தனது மகனிடம் அவசரப்பட்டு கோபப்படாமல் பொறுமையாக அதன் காரணத்தை அறிந்துகொள்ள முற்படுகின்றார். பின்பு அவர் அவையனைத்தையும் விவேகத்துடன் தனது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார் (லூக் 2:51).

கானாவூர் திருமணத்திலும் அன்னை மரியா விவேகத்துடன் செயல்பட்டு திருமணம் ஏற்பாடு செய்த குடும்பத்திற்கு எவ்வித அவமானத்தையும் விளைவிக்காமல் வந்திருந்த விருந்தினர்களை உபசரித்து நிகழ்ச்சியை எளிதாக முடித்தார். இயேசு தனது நேரம் இன்னும் வரவில்லை என்று சொல்லியபோதும்கூட அவருடைய விவேகம்தான் அங்கு பணியாளர்களுக்கு 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' என்று கட்டளையிடத் தூண்டியது (யோவான் 2:5).

'நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்' (மத் 7:24); 'முன்மதியுடைய ஐந்து கன்னிப்பெண்கள் உவமை' (மத் 25:1-13); 'நேர்மையற்ற அந்த வீட்டுப் பொறுப்பாளர் முன்மதியோடு செயல்பட்டதால், தலைவர் அவரைப் பாராட்டினார்' (லூக் 16:8). மேற்கண்ட விவிலிய வார்த்தைகளில் கூறப்பட்டிருப்பதைப் போன்று அன்னை மரியா தன் வாழ்நாள் முழுவதும் முன்மதியோடு செயல்பட்டிருந்தார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆம், அவர் ஒருநாளும் தனது விருப்பத்தை நாடாமல், வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் கடவுளின் திட்டம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள மிகவும் பொறுமையுடனும் விவேகத்துடனும் நடந்துகொண்டார். ஆகவேதான் அவரை நாம் 'மகா புத்தியுடைத்தான கன்னிகையே' என்று வாழ்த்திப் போற்றுகின்றோம்.

அன்னை மரியாவைப் போன்று நாமும் நமது வாழ்வில் கடவுளின் திட்டத்தைப் புரிந்துகொள்ள விவேகத்துடன் வாழ்வோம்; இறையருளைப் பெறுவோம். இன்றைய உலகில் நாம் நமது வாழ்வில் ஒருசில முடிவுகளை மேற்கொள்வதில் பல்வேறு கடினமான சூழலை சந்திக்க நேரிடுகின்றது. இத்தகைய நிலையில் நம் அனைவரின் உள்ளங்களும் புதுப்பிக்கப்பட்டு கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளியவும், எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதைப் புரிந்துகொள்ள இறைவன் நமக்கு விவேகத்தை அருளவும் அன்னைமரி வழியாக செபிப்போம். ஓ மரியே! மிகவும் புத்தியுடைத்தான கன்னியே! நீர் உம் வாழ்வில் இறைவனின் திட்டத்தை தேர்ந்து செயல்படுத்தியதுபோல நாங்களும் செயல்படுத்திட உமது திருக்குமாரனிடமிருந்து நல்ல ஆலோசனையையும், ஆவியையும் நிறைவாகப் பெற்றுத் தருவீராக. ஆமென்.





# மகப்பேறு வேண்டி ஜெபம்



அதிசயங்களையும் அற்புதங்களையும் அன்றாடம் நிகழ்த்தும் எம் இறைவா, வாழ்வின் ஊற்றும் தொடக்கமும் நீரே. மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தீர். திருமணத்தினால் குடும்பமாக வாழ அவர்களை இணைத்தீர். நீர் எம்மீது வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாடாகவும், தம்பதியர் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பின் அடையாளமாகவும் குடும்பங்களைக் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கின்றீர். குழந்தையின்றித் தவித்த அன்னாள், எலிசபெத் ஆகியோரின் மீது மனமிரங்கி, அவர்களுக்குக் குழந்தை வரம் தந்தீர். அதுபோல, இன்று குழந்தையின்றித் தவிக்கும் தம்பதியர் ஒவ்வொருவர் மீதும் உமது கருணையைப் பொழியுமாறு நாங்கள் உம்மை வேண்டுகிறோம்.

இறைவா, உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதை நாங்கள் விசுவசிக்கின்றோம். இறந்த உடலுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றலும், வறண்ட நிலத்தை வளப்படுத்தும் வல்லமையும் நிறைந்தவர் நீர். எம் தாய் ஜீவ மாதாவின் பரிந்துரையின் வழியாக, குழந்தைப் பாக்கியம் வேண்டி நம்பிக்கையோடு உம் திருமுன் நிற்கும் இத்தம்பதியர் மீது மனமிரங்கி இவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் தந்து ஆசீர்வதித்தருளும். உமது அருளால் இவர்கள் பெறும் குழந்தைகளைத் தெய்வ பயத்திலும், ஞானத்திலும், விசுவாசத்திலும், நற்பண்பிலும் வளர்க்கத் தேவையான ஆற்றலையும் அருளையும் தருவீராக. இதனால் நாங்கள் என்றும் உமக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்ந்து உம்மை மகிமைப்படுத்துவோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

**செப உதவிக்குத் தொடர்பு கொள்க**

அலைபேசி: 9976436474, 9566070161
மின் அஞ்சல்: jeevamatha2011@gmail.com, jeevamatha2011@hotmail.com
கடிதம்: Fr.Parish Priest
Parameswaran Nagar
Sholinganallur
Chennai – 119

இறந்த நம் உறவினர்கள் என்றும் நம்முடன்
வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றனர்
அவர்களின் இலட்சியங்கள்
விட்டுச் சென்ற பண்புகள்
காட்டிய வாழ்க்கை பாதைகள் யாவும்
நம்முடன் இருந்து நம்மை வழிநடத்துகின்றன
அவர்களின் பண்புநலங்களைப் பின் தொடர்வதே
நாம் அவர்களுக்குச் செலுத்தும் அஞ்சலி
இறந்த அன்புடை நெஞ்சங்களின் உறவுகள்
என்றுமே நம்மைவிட்டு நீங்குவதில்லை
அன்பு என்பது காலத்தால் அழியாத ஆற்றல்
இந்த அன்புக்காக வாழ்ந்த ஒவ்வொருவரும்
என்றுமே நம்மில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர்
நாம்..........
அன்புடை ஆன்மாக்கள்
ஆண்டவன் அடிசேர செபிப்போம்
அன்பு கொண்டு வாழ்வோம்
விண்ணுலகில் நிலையான இன்பம் பெற
'நாமும் ஒரு நாள்' .......... என்பதை நினைவோம்

## *அன்பார்ந்த வாசகர்களே!*

**சென்ற ஆண்டு நம் அனைவருக்கும் *'ஞாயிறு வழிபாட்டுத் துணைவன்'* பகுதியில் திருப்பலி முன்னுரை, வாசகங்களின் முன்னுரை மற்றும் மன்றாட்டுகளை எழுதி நம் அனைவரையும் ஞாயிறு திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் முழுமையான மற்றும் அர்த்தமுள்ள விதத்தில் பங்கேற்க உறுதுணையாக இருந்த *அருள்பணி. ஆல்பர்ட் ம.ஊ.ச* அவர்களை நன்றியோடு நினைத்துப் பார்த்து அவர் பணி சிறக்க வாசகர்கள் உங்கள் அனைவரின் சார்பாக வாழ்த்துகின்றேன். இனிவருகின்ற காலங்களில் இப்பகுதியை நமக்கு வழங்க இருக்கின்ற *அருள்பணி. செல்வநாயகம், ம.ஊ.ச* அவர்களை அன்போடு வரவேற்கின்றேன்.**

**மேலும் *'அன்னை மரியாவின் திருப்பயணங்கள்'* என்ற தலைப்பில் கடந்த ஆண்டு முழுவதும் நம் அனைவரையும் அன்னை மரியாவோடு இறைவனை நோக்கியத் திருப்பயணத்தை தமது கட்டுரைகளின் மூலம் பயணிக்கச் செய்த *அருள்பணி. ஜான் ஜோசப் ம.ஊ.ச* அவர்களையும் நன்றியோடு நினைவுகூர்ந்து அவர் பணி சிறக்க வாழத்துக்களும் செபங்களும்.**







# மனுக்குல மாண்பு மரியா

22

அருள்பணி. ஜான் ரொன்காலி ம.ஊ.ச.
ஜெகன் மாதா பிரையரி, திருச்சி.

## "இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும்...."

இது நவம்பர் மாதம் !

நவம்பர் என்றாலே நம்மோடு வாழ்ந்திருந்து, தங்கள் மண்ணக வாழ்வை முடித்துக்கொண்டு, காற்றாய்க் கலந்து, தங்களது நித்தியத்தை எதிர்நோக்கியிருக்கும் அமரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காக இறைவேண்டல் புரியும் காலம் என்று காலாகாலமாகக் கொண்டாடி வருகிறோம். மனிதர்கள் தாங்கள் இவ்வுலகில் வாழ்ந்திருந்த காலமதை வாஞ்சை பகிர்ந்து வாழ்ந்திருந்தால், வளமைகளைப் பகிர்ந்து வாழ்ந்திருந்தால், உறவுகளைப் புரிந்து, உயர்வை மாத்திரமே நாடி வாழ்ந்திருந்தால், உன்னதனின் கருணையிலே இணைந்து வாழ்ந்திருந்தால், அவர்களுக்கு முக்தி நிச்சயம் என்று எத்தனையோ பரிந்துரைகள் இந்தப் பாரினில் பழக்கத்திலிருந்திருக்கின்றன.

இந்நிலையில், பாமரனின் விசுவாசப் பயண வரலாற்றில் இன்னுமொரு பக்திமுயற்சியாக, வாழ்க்கையின் வரலாற்றை வென்ற மரியாளைப் பார்த்து, அவளது அடிச்சுவட்டைப் பின்பற்றி, அகிலமெங்கும் கடந்துவந்த அனுபவ முதிர்ச்சியாக உருவானதுதான் "அருள் நிறைந்த மரியே வாழ்க!" எனும் ஜெபத்தின் இறுதியில் அனைவரும் உருக்கமாக உச்சரிக்கும் "இப்பொழுதும் எங்கள் மரணநேரத்திலும், வேண்டிக்கொள்ளும்" எனும் பதம்.

திரு அவையின் பாரம்பரியத்தில், வழிபாட்டின் வரலாற்றில், "பாவம்கண்டு பொங்கியெழும் இறைவனாக, தீமைகண்டு சீறியெழும் அரசராக, அநீதியினை அறவே ஒழித்தழிக்கும் நீதிபதியாக" ஆண்டவனை மக்கள் சித்தரிக்கத்தொடங்கியபிறகு, அவரது ஆக்கினையின் வேகம் தணிக்கும் இடைநிலையாளராகவும், பரிந்துரைப்பவராகவும் மரியாளை மக்கள் கொண்டாடத் தலைப்பட்டார்கள்.

நாசரேத்தூரில் தனது சிறப்பான பணிக்காக அழைத்த இறைவனின் குரலுக்கு "சம்மதம்" என்று பணிந்தவள், தம் மகன் சென்ற இடங்களுக்கெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து சென்று பாங்குடன் திடம் தந்தவள், கானாவின் திருமணத்தின்போது, கனிவுடன் இளையோரின் குறை களைந்தவள், மகனின் சிலுவையடியிலே, அவரது பாடுகள் மற்றும் மரணத்திற்கு நிலையான சான்றாக நின்றவள், மகனின் உயிர்ப்பின் மகிமையை மானசீகமாக அனுபவித்தவள், மகன் உருவாக்கிய திரு அவையை மனமொன்றிய ஜெபங்களின்மூலம் மங்களமாக ஒருங்கிணைத்தவள், வாழ்ந்தோரை மட்டுமல்ல, மரணமடைந்து மறைந்தோரைத் தன் மாட்சிமிக்க ஜெபங்களினால் இறைபதம் சேர்ப்பவள் எனும் விசுவாசத்தை ஆழமாக வரலாற்றுப் பக்கங்களில், மக்கள் தம் மனங்களில் நம்பிக்கையாக விதைத்தவள். இவள் இன்று, குறிப்பாக

இறந்தோரை நினைவுகூரும் யாவருக்கும் நித்தியத்தின் மேன்மையையுணர்த்துபவள். இவளது வெற்றியின் இரகியம், அவள் எந்நாளும் இறைவனின் பிரசன்னத்திலிருந்தவள், இறைவனின் உணர்வோடு வாழ்ந்தவள், இறைவனின் சுகிர்தமாகவே மாறியவள். இதனை உணர்ந்துகொண்டதால்தான் வரலாற்றின் விசுவாச முதிர்ச்சியடைந்தவர்கள் மரியாளிடமே தங்களது முக்திக்காகவும் பரிந்துரைக்கக் கேட்கத் தொடங்கினார்கள். அவர்களின் உள்ளத்து உணர்வுகளெல்லாம், ''உன்னோடு உறைந்திட இறைவா, உன்னதமான உறுதியைத்தா'' என்று வேண்டி பலம் பெற்றுக்கொண்ட மரியாளைப்போலவே தாமும் பெற்றுக்கொள்ள அவள் வழி இறைமொழியறியத் துடித்தார்கள். இதன் விளைவுதான். ''இப்பொழுதும் எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்'' எனும் உயரிய சரணம்.

**இறைவனோடிருப்போருக்கு எவ்வனுபவமும் உயர்வுதான்**

ஒருமுறை, கிராமம் ஒன்றில் வழிபாடு ஒன்று நடந்துகொண்டிருந்தது. நற்செய்திக்கெனத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட சகோதரர் ஒருவர் மிக ஆர்வத்துடன் வழிபாடு நடத்திக்கொண்டிருந்தார். பேய் பிடித்திருக்கின்றதென்று சொல்லி ஒரு இளைஞனை அங்கே அழைத்து வந்து, அவரிடம் விட்டு அவனுக்காக வேண்டச் சொன்னார்கள். சகோதரர் பார்த்தார். வேண்டத்தொடங்கினார். தனக்கேயுரிய பாணியில் பாடிக்கொண்டும், நற்செய்தியை வாசித்து கட்டளையிட்டுக்கொண்டும் இருந்தார். பாடும்போது அவரது குரலைக் கேட்டு பலர் சிரிக்கத் தொடங்கினர்.

இதன் உச்சகட்டமாக, வெளியே ஒரு கழுதையும் கத்தத்தொடங்கியது. அதைக்கேட்டு மேலும் பலர் சப்தமாகவே சிரித்தனர். ஆனால் அந்த சகோதரரோ சிறிதும் தளரவில்லை. மாறாக, பலரும் வியக்கும் வண்ணம், மேலும் உரத்தகுரலில் இவ்வாறு வேண்டினார்: « *இதோ என் இயேசு ராஜா, அன்று எருசலேமுக்கு மக்கள் புடைசூழ கழுதை மீதமர்ந்து தம் சீடர்கள் குழுவோடு ஆரவாரத்தோடு வந்ததுபோல, இதோ உன்னை நொறுக்க விரைந்து வருகிறார். தன் மக்களை மீட்க, கழுதையின் மீதமர்ந்து தன் இளவலை அனுப்புவதாக வாக்களித்த வல்ல தேவன் விரைந்து வருகிறார். ஓ சாத்தானே ஓடி ஒழிந்து போ* » (செக் 9:9) என்று பலமாக வேண்டினார்.

அங்கே பேய் ஓடினதோ இல்லையோ, தனது குரலைக்கேட்டு மக்கள் சிரிப்பதைக்கூட பொருட்படுத்தாமல், தன் மனம் நிறைந்திருந்த இறைவனின் வார்த்தையினை, சரியான நேரத்தில், சரியான அனுபவ உண்மையாக அறிக்கையிட்ட அந்த சகோதரர் உண்மையிலேயே என் பார்வை ஒளியைத் தூண்டிவிட்டார். பார்வையின் கோணத்தை மாற்றிவிட்டார்.

இத்தகைய ஒரு ஈடுபாடு, (commitment) உடனடியாக இறைவார்த்தையைப் பயன்படுத்தும் பக்குவம் போன்றவை ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையில் இருந்தால், எத்தனையோ சாட்சிகளும். மீட்சிகளும் நிறைவேறிடும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. நாம் இயேசுவோடு இருப்பவர்கள். **இயேசுவுக்காக** என்பதைவிட, **இயேசுவோடு** என்பதில்தான் நிறைவு இருக்கின்றது என்பது திண்ணம். இந்த இயேசுவினருகில் அழைத்துச்செல்ல அவரை முழுமையாக அறிந்த புரிந்த, அன்பையனுபவித்த அன்னை மரியாளையன்றி வேறுயாரால் முடியும்?

அதனால்தான் ஒவ்வொரு பக்தனும் காலகாலமாக வேண்டுகிறான், **''அடியேன் என் வாழ்வில், அம்மா நீ அவசியம்''** என்று.

அவனியில் பிறந்த ஒவ்வொருவரும், ஏதோசில விஷயங்களில் அதிர்ஷ்டசாலியாகவும், ஏதோசில விஷயங்களில் துரதிர்ஷசாலியாகவும் இருக்கிறோம்,





# நாமும் ஒரு நாள்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் - எங்கள்
இறைவா! இறைவா! இறைவா! (பாரதியார்)
இறைவா! விரிநீர் வியனுலகம் அமைத்தாய்
அதனுள் அத்தனை கோடி இன்பமும் வைத்தாய்
உன் படைப்பினைச் சுவைக்க
மனுக்குலம் படைத்தாய்; உவகையில் திளைத்தாய்
இன்பம் காண்பதில் ஓர் எல்லையும் வகுத்தாய்
அதுதான் வாழ்வின் முடிவெனும் நிலையோ!
இவ்வுலக இன்பங்களை அளித்த நீ
விண்ணுலக இன்பமும் தரவிழைந்தனையோ!
எனவேதான் மனிதரின் மரணமோ!
பிறந்தவரெல்லாம் இறக்கவும் வேண்டும்
என்பதோ உன் நியதி?
நமது முன்னோர் வாழ்வின் முடிவையும்
அவர்கள் கல்லறையில் சிலுவைகளாய் நிற்பதையும்
'நாமும் ஒருநாள்' சிலுவைகளாவோம் என்பதையும் நினைத்து
நிலையான மறுவாழ்வின் தகுதிக்கு
நம்மைத் தூய்மைப்படுத்தத் தூண்டுவதே
'கல்லறைத் திருநாள்'
பாவநோயால் துன்புற்றுத் தூய்மையுறத் துடிக்கும்
ஒவ்வொரு ஆன்மாவிற்கும் நாம் காட்டும் கரிசனமே
'நவம்பர் இரண்டு'
தங்கள் பாவங்களுக்கு வருந்தி
மனத்துயர் அடைந்தவர்களை
இறைவன் கைவிடுவதில்லை
''என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வர்'' (யோவா 11:25)
நவம்பர் இரண்டாம் நாள்
கல்லறைகளைத் தூய்மைப்படுத்தி
பூக்களால் அலங்கரிக்கிறோம்
இறந்தவர்களுக்காகச் செபிக்கிறோம்
இயேசுவின் உயிர்ப்பை உறுதிபடுத்தியது......
அவரது திறந்த கல்லறையே
நமது செபத்தாலும், தான தர்மத்தாலும், தவத்தாலும்
இறந்தோரின் கல்லறைகளும் திறக்கப்படும்
அவர்களும் உயிர்த்து நிலை இன்பம் துய்ப்பர்

வருகைக்காகக் காத்திருக்கின்றார். ஏற்கனவே தூய ஆவியாரின் பொழிவைப் பெற்றுக்கொண்டவர் என்ற காரணத்தினால் மரியா அங்கே கூடியிருந்தவர்கள் அனைவருக்கும் நம்பிக்கையைத் தருகின்றார். தூய ஆவியாரின் வருகை நிகழ்வது உறுதி என்று சீடர்களை தேற்றுகின்றார். பெந்தகோஸ்தே நாளின்போது சீடர்களோடு இணைந்து இரண்டாம் முறையாக தூய ஆவியாரைப் பெற்றுக்கொள்கின்றார். தூய ஆவியாரின் ஆற்றலால் கிறிஸ்து கன்னி மரியாவின் வயிற்றில் மனுவுரு எடுத்தார். அதே தூய ஆவியானவர் பெந்தகோஸ்தே நாளன்று கிறிஸ்துவின் மறை உடலான திருஅவையை பிறப்பிக்கச் செய்கிறார். இவ்வாறு புதிய திருஅவை உதயமானபோது மரியா உடனிருந்து சீடர்களை வழிநடத்துகின்றார். ஆகவே, மரியா திருஅவையோடு இரண்டறக் கலந்திருக்கிறார். மரியா இல்லாத திருஅவையை எண்ணிப் பார்க்க இயலாது.

கிறிஸ்து தாம் வாக்களித்தது போலவே தம் தூய ஆவியாரை அனுப்பி திருஅவையை பிறப்பிக்கச் செய்ததைக் குறித்து மரியா அகமகிழ்ந்திருப்பார். தம் மகனின் மீட்புத் திட்டத்தில் தன்னையும் ஒரு பங்காளியாய் இணைத்துக்கொண்ட கடவுளின் கருணையை எண்ணி மரியாவின் உள்ளம் இறைவனைப் போற்றி புகழ்ந்திருக்கும்.

இறைத்திட்டத்தை செயல்படுத்த எண்ணிலடங்கா தியாகங்களை மரியா செய்ய வேண்டியிருந்தது. இயேசு பற்பல ஊர்களுக்கும் நகர்களுக்கும் நடந்துசென்று நற்செய்தியை முழு மூச்சுடன் அறிவித்து, கடவுளின் கருணையை எல்லாருக்கும் எடுத்துரைத்ததுபோல மரியாவும் இயேசுவோடு இணைந்து, இயேசுவுக்காக மேற்கொண்ட பயணங்கள் ஏராளம். அந்தப் பயணங்களில் எத்தனை எத்தனை சவால்களை, இன்னல்களை சந்தித்திருப்பார்? அன்னையின் பயணங்களைப்பற்றி இதுகாறும் சிந்தித்த நமக்கு அன்னை கூறும் செய்தி என்ன?

இறைவனின் திட்டத்திற்கென தன்னை முழுவதுமாக கையளித்து, எதிர்பட்ட துன்பங்களைத் தாங்கிக்கொண்டு, இறுதிவரை இறைவிருப்பத்தை மட்டுமே தன் நோக்கமாகவும், எண்ணமாகவும், மூச்சாகவும் ஏற்றுக்கொண்டு வாழ்ந்ததால் நம் அன்னை இறைவனின் மிக உன்னதமான சீடத்தி என்ற பெருமையை அடைகிறார். ஆகவேதான் இன்று நமக்கெல்லாம் முன்மாதிரியாக அந்த அன்னைத் திகழ்கின்றார். நாமும் நம் அன்னையைப்போல கடவுளின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும். அவரது அழைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதையே நமது வாழ்வாக்க வேண்டும். அதன்நிமித்தம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் இன்னல்களையும்கண்டு துவண்டுவிடாமல் இறுதிவரை நெஞ்சுரத்தோடு நிலைத்து நிற்க வேண்டும். அப்படி செய்யும்போது அன்னையைப்போல நாமும் இறைவனின் மாட்சியில் பங்குபெறுவோம் என்பது உறுதி.

இதுவே நம் அன்னை மேற்கொண்ட பயணம். இதுவே அவர் நமக்கு காட்டும் பாதை. அந்தப் பாதையில் துணிவோடும், நம்பிக்கையோடும் அன்னையைப் பின்தொடர்ந்து நாமும் நடப்போம். அன்பு அன்னை நம் ஒவ்வொருவரையும் தொடர்ந்து வழிநடத்துவாராக! நன்றிகள்!!!

**பயணம் முடிந்தது.**



மரிவழி இறைப்பணி



இதுதான் இயற்கையின் நியதியும்கூட. ஆண்டவன் உலகத்தைப் படைத்தபோது, அனைத்தையுமே நன்றாகவும், நலன் தருபவையாகவும்தான் படைத்தான். அதன் பிறகு மனிதன் தனக்குத் தரப்பட்ட சொற்ப அறிவினை விருத்திசெய்துகொண்டபோது, பேசத்தெரிந்தவன் போதனையாளியாகவும், உழைக்கத்தெரிந்தவன் சாதனையாளியாகவும், இடைப்பட்டவன் ஆள்பவனாகவும் மாறிப்போனான்.

இது ஒவ்வொருவரும் அடுத்தவரை மதித்து வாழ்ந்தவரைதான். எப்போது, அடுத்தவர்மீது சந்தேகமும், அடுத்தவரைவிட தாம் உயர்வது எப்படி (இதுவரை, எத்தனையோ மதங்களும் சமயங்களும் உருவாகி வளர்ந்திருந்தாலும், அன்பையும், அது நிகழ்த்தும் சாகசங்களையும் தவிர இதுதான் உயர்வு என்று தீர்க்கமான வரைமுறை எதுவும் உருவாக்கப்படவில்லை). என்று பொறாமையும் அரசியலும் எட்டிப்பார்த்ததோ, அன்றே தொடங்கியது சுயநலமும், காட்டிக்கொடுத்தலும், ஆள்கவிழ்ப்பும். இதன் விளைவுகள்தானே கோஷ்டிகளும், போர்களும், வன்முறைகளும், வக்கிரங்களும்.

காலம் சுருங்கச்சுருங்க, யார் குறைந்த அளவு மோசமானவரோ, அவரே உயர்ந்தவர் (எரிகின்ற கொள்ளியில் எந்தக்கொள்ளி நல்ல கொள்ளி?), உன்னதமானவர், மாண்புள்ளவர், மாமேதை என்று கொண்டாடி, மாபெரும் இந்த உலகம், மனிதனின் மழுங்கிய மூளைக்குள் சுருண்டுகொண்டது. மரம் வெட்டிக்கடத்துகின்றவர்கள் பசுமைக்காவலர்கள் என்றும், பணத்தை வட்டிக்கு விட்டுக் கொள்ளையடிப்போர் கோவில்களுக்கு உபயம் செய்தால் வள்ளல்கள் என்றும், கட்டிடங்கள்கட்டி, கலர்க்கலராய் வண்ணம் பூசி, கல்வி வியாபாரம் செய்பவர்கள் கல்வித்தந்தையர் என்றும், கொலை கொள்ளை கற்பழிப்பில் தேர்ந்தோர் சமூகக்காவலர்கள் என்றும், தாதாக்களாக சுற்றிவந்தோர் தலைவர்களாகவும், வேஷங்கள் கட்டி, முகமூடியணிந்து முன்னணியில் அமர்ந்து முக்கி முனகி உபதேசம் செய்வோர் சான்றோர் என்றும், இந்த சரித்திரத்தில் வாழ்வதைக் காணத்தானே செய்கிறோம்???

ஆக மனிதனின் பல்வேறு பரிணாமங்களுமே இன்று பரிதவித்து வாழ்வதனால், பாரினில் வாழ்க்கை முடியும்போது, பாவவுணர்வுகள்மட்டுமல்ல, பாவங்களே சுமைகளாகித் தவிக்கையில், பரிவும் இரக்கமும் காட்டி, பரமனின் பதமடைய பரிந்துரைக்கும் பரோபகாரராக மரியாள் முன்னிற்கின்றாள். மனிதன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்த உலகின் பல்வேறு நிலைகளும், அனுபவங்களும் பாவத்தைச் சுற்றியதாகவே அமைந்துவிடுகின்ற காரணத்தால், நம்பினோரும், நம்பாதோரும் ஆக அனைவருமே அன்னையின் அரவணைப்புக்கு அவசியம் கொண்டவர்கள்தான்.

அம்மா மரியே, அனுதினம் எம்மையே, ஆதரித்தாண்டு,
உம் அருமை மகனின் அடிசேர்ப்பாயே.
அகிலம் வென்றவளே, இகமதைப்புரிந்தவளே,
ஈன்ற தாயினும் மேலாக எம்மை இருகரம்பிடித்து, இனிமைகாணச் செய்வாயே.



# புனிதர்களின் தோழமையில் மரியா

அருள்பணி. முனைவர். டெனிஸ் ம.ஊ.ச.,, உரோமை.

நவம்பர் மாதத்தின் முதல் நாள் அனைத்துப் புனிதர்களின் விழாவையும், இரண்டாம் நாள் இறந்தோர் அனைவரின் நினைவு விழாவையும் அகில உலகத் திரு அவைக் கொண்டாடுகின்றது. இந்த இரண்டு விழாக்களையும் அடுத்தடுத்த நாட்களில் கொண்டாடுவதன் காரணம் என்ன? புனிதர்களும், இறந்த நம்பிக்கையாளர்களும் இந்த உலகைவிட்டு பிரிந்துபோன போதிலும்கூட, நமக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள உறவு முறிந்துபோகாமல் அது இன்றும் நீடிக்கின்ற ஒரு உறவு என்பதை நாம் முழுமையாக நம்புவதால், விசுவசிப்பதால்தான் நாம் இந்த இரண்டு விழாக்களையும் கொண்டாடுகின்றோம்.

நமது பெற்றோர்கள், உடன்பிறந்தோர், பிள்ளைகள், உறவினர், நண்பர்கள் இந்த உலகைவிட்டு பிரிந்து போனாலும், அவர்களுக்கும் நமக்கும் உள்ள உறவு முறிந்து போவதில்லை. அவர்களின் நினைவு நமது நெஞ்சங்களில் நீங்காது இடம் பெறுகின்றது. அதேபோல, அவர்களும் நமக்காக இறைவனிடம் பரிந்துபேசி, செபித்து பல அருள்வரங்களை நமக்கு செய்கிறார்கள்.

எத்தனை எத்தனையோ பக்தர்கள் புனிதர்களிடம் வேண்டிக்கொள்வதன் மூலமாக பல புதுமைகளையும், நன்மைகளையும் பெற்றுக்கொள்வதை நாம் கண்கூடாக பார்க்கின்றோம். எனவேதான், நமது கிறிஸ்தவ நம்பிக்கை அறிக்கையின் ஒரு முக்கியமான அம்சமாக 'புனிதர்களின் தோழமை' கருதப்படுகின்றது. ஞாயிறு திருப்பலிகளில் நாம் அறிக்கையிடுகின்ற நம்பிக்கை அறிக்கையில் 'புனிதர்களின் உறவை நம்புகிறேன்' என்று நாம் அறிக்கையிடுகின்றோம். புனிதர்களின் உறவு அல்லது புனிதர்களின் தோழமை என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான், திரு அவை வழிபாட்டுக் காலண்டரில் ஒவ்வொரு நாளும் பல புனிதர்களை நினைவு கூறுகின்றோம். அவர்கள் வழியாக நாம் செபிக்கின்றோம்.

**திரு அவை கிறிஸ்துவின் மறைஉடல்**

திரு அவை என்பது இவ்வுலகில் வாழும் கிறிஸ்தவர்களின் கூட்டமாகிய ஒரு நிறுவன அமைப்பு மட்டுமே என்று எண்ணுவது மிகவும் தவறு. திரு அவை என்பது பாவிகளாலும், புனிதர்களாலும் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ள ஒரு குடும்பம். இந்த திருக்குடும்பமானது, கிறிஸ்துவின் மறைஉடல் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, விண்ணில் வாழும் புனிதர்களையும், இம்மண்ணில் வாழும் மனிதர்களையும் இணைக்கும் பாலமாக இருப்பவர் கிறிஸ்து. ஏனெனில், அவர் முழு மனிதராகவும் முழு இறைவனாகவும் இரண்டு இயல்புகளையும் தன்னில் உள்ளடக்கி ஒரே நபராக அவர் வாழ்வதை நம்புகின்ற நாம், புனிதர்களுக்கும் நமக்கும் ஒரு ஆழமான உறவு, நெருக்கமான தோழமை இருப்பதை முழுமையாக







சாட்சிகளாகி நிற்கின்றார்கள். அதன்பிறகு தூய ஆவியாரின் வருகையின்போது மரியாவும் அங்கே திருத்தூதர்களோடு வீற்றிருக்கின்றார்.

ஆண்டவர் இயேசு போதித்த இறையரசை இவ்வுலகில் கட்டியெழுப்புவதற்காக அவர் விரும்பிய, அவரது இயக்கமாகிய திருஅவையை உருவாக்கும் அந்தத் தொடக்கத் தருணங்களில் அன்னை மரியாவின் உடனிருப்பும் பங்கும் மிகவும் மகத்தானது.

இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகு பெந்தகோஸ்தே நாள்வரை பலவிதமான குழப்பங்களுக்கு உள்ளாகியிருந்த இயேசுவின் சீடர்கள் சிதைந்துபோகாமல் காத்தவர் மரியா. அனைவரையும் ஒன்றிணைத்து, ஒரே மனதாக, இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கைக்கொண்டு, செபத்தில் நிலைத்திருக்கத் தூண்டியவர் அன்னை மரியா.

திருத்தூதர் பணிகள் நூலில் சொல்லப்பட்டிருக்கும் மேல்மாடியில் இருந்தவர்களுள் அன்னை மரியா மட்டுமே இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு, அவரின் பொதுவாழ்க்கை, இறப்பு, உயிர்ப்பு மற்றும் அவரின் விண்ணேற்றம் என அனைத்து நேரங்களிலும் உடனிருந்தவர். இவை அனைத்திற்கும் சாட்சியும் அன்னை மரியா மட்டுமே. ஆகவே, இயேசுவின் தாய் என்ற முறையில் தம்முடைய தனிப்பட்ட அனுபவங்களாலும், இயேசுவின் பிறப்பு முதல் விண்ணேற்றம் வரை நிகழ்ந்த அனைத்திற்கும் சாட்சியாக நின்றதாலும் அன்னை மரியா இயேசுவின் சீடர்களை நம்பிக்கைப் பாதையில் வழிநடத்தும் அன்னையாகவும் கற்றுத்தரும் போதகராகவும் இருந்தார் என்று சொன்னால் அது மிகையல்ல. இந்த நேரம் முதல் மரியா யோவானுக்கு மட்டும் தாயாக அல்ல, அனைத்து சீடர்களுக்கும் தாயாக மாறுகின்றார். மட்டுமல்ல, இயேசுவின் வழியைப் பின்பற்றுகின்ற, உலகில் உள்ள அனைத்து சீடர்களுக்கும் மரியா தாயாகிறார்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பு அறிவிப்பின்போது தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட மரியா தற்போது இயேசுவின் சீடர்களோடு அதே தூய ஆவியாரின்

# அன்னை மரியாவின் திருப்பயணங்கள் 12



அருள்பணி. ஜான் ஜோசப் ம.ஊ.ச., குழந்தை இயேசு ஆலயம், சென்னை.

## பயணம் பத்து

## இயேசுவின் இறப்புக்குப்பின் திருத்தூதர்கள் மனங்குழம்பி நின்றபோது அவர்களைத் தேற்ற மரியா மேற்கொண்ட பயணம்

**பின்பு அவர்கள் ஒலிவ மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பினார்கள். இம்மலை எருசலேமுக்கு அருகில், ஓய்வுநாளில் செல்லக்கூடிய தொலையில் உள்ளது. பேதுரு, யோவான், யாக்கோபு, அந்திரேயா, பிலிப்பு, தோமா, பர்த்தலமேயு, மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, தீவிரவாதியான சீமோன், யாக்கோபின் மகன் யூதா ஆகியோர் திரும்பி வந்தபின் தாங்கள் தங்கியிருந்த மேல்மாடிக்குச் சென்றார்கள். அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள். (தி.ப 1:12-14)**

இயேசுவின் இறப்புக்குப்பின் அவரின் சீடர்கள் மனம் கலங்கி செய்வதென்னவென்று அறியாமல் திகைத்து நின்றார்கள். அவர்களின் வாழ்க்கையே சூன்யமாகிவிட்ட ஒரு நிலை. தங்களையும், தம் மக்களையும் துன்பங்களிலிருந்து விடுவித்து அமைதியையும் மகிழ்ச்சியையும் கொண்டு வருவார் என்று தாங்கள் இதுநாள்வரை நம்பியிருந்த இயேசு அநியாயமாக கொல்லப்பட்டுவிட்டார். அவரே கதி என்று அவர் சொன்ன வார்த்தைகளையெல்லாம் நம்பி, செய்துவந்த தொழிலையெல்லாம் விட்டுவிட்டு, அவரோடு உண்டு உறங்கி, ஏறக்குறைய மூன்று ஆண்டுகளைக் கழித்தாயிற்று. இனி என்ன செய்வது? எங்கே செல்வது? என்று திக்குத் தெரியாமல் நின்றுகொண்டிருக்கிறார்கள் சீடர்கள்.

மரியா தம் அருமை மகனை பரிகொடுத்துவிட்டு துன்பம் மேலோங்கிட இருந்தாலும் இயேசுவின் வார்த்தைகள் அவர் மனதை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தன என்றால் அது மிகையாகாது. தான் இறந்த மூன்று நாட்களுக்குப்பின் உயிர்த்தெழுவேன் என்று அவர் சொல்லியிருந்தது மரியாவை நம்பிக்கைக் கொள்ளச் செய்தது. தன் மகனின் மீது அவர் வைத்திருந்த இந்த ஆழமான நம்பிக்கையை அவர் இயேசுவின் சீடர்கள் மனதிலும் நிலைத்திருக்கச் செய்கின்றார். ஒரு தாய்க்குரிய பாசத்தோடும் அரவணைப்போடும் அவர்களை வழிநடத்துகின்றார். அனைவரும் இணைந்து அவரின் உயிர்ப்பை அனுபவித்து ஆண்டவரின் விண்ணேற்றத்திற்குச்







விசுவசிக்க வேண்டும். எனவேதான், நாம் புனிதர்களிடம் செபிக்கின்றோம். அவர்களின் முன்மாதிரியான வாழ்வை நாமும் வாழ்ந்துகாட்ட முயற்சிக்கின்றோம். அவர்களை நமது விசுவாச வாழ்க்கையின் முன்னுதாரணமாக பாவிக்கின்றோம். அவர்களுக்கு வணக்க மரியாதை செலுத்துகின்றோம். இந்த புனிதர்களுக்கெல்லாம் புனிதையாக வாழ்பவர் அன்னை மரியா. இறைவன் மரியாவுக்கு புனிதர்களின் திருக்கூட்டத்தில் முதலிடம் அளித்துள்ளார். எனவே, நாம் நவம்பர் 1 ஆம் நாள் எல்லா புனிதர்களின் விழாவைக் கொண்டாடுவது உண்மை என்றாலும், அந்த அனைத்து புனிதர்களிலும் முதல் புனிதையாக இருப்பவர் நம் அன்னை மரியா.

**புனிதர்களின் வணக்கமுறையா? சிலை வழிபாடா?**

கத்தோலிக்கத் திரு அவையை சேராத, பிற பிரிவினை சபைகளின் கிறிஸ்தவர்கள், புனிதர்களின் வணக்கமுறையை ஏற்றுக்கொள்வதில்லை. அதை ஒரு சிலை வழிபாடாகக் கருதி ஏளனம் செய்கின்றனர். இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் 'புனிதர்களின் வணக்கமுறை' என்றால் என்ன என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ளாததுதான். கடவுளை மட்டுமே நாம் ஆராதிக்கின்றோம். ஆனால் புனிதர்களை நாம் (கடவுளைப்போல) ஆராதிப்பதில்லை. புனிதர்களுக்கு நாம் வணக்க மரியாதை மட்டுமே செலுத்துகின்றோம் என்பதை பலர் சரியாகப் புரிந்துகொள்வதில்லை. கடவுளுக்கு மட்டுமே ஆராதனை (Adoration) ஆனால் புனிதர்களுக்கு பக்தியோடு கூடிய வணக்கம் மட்டுமே (Devotion) நாம் செலுத்துகிறோம். இந்த புனிதர்களின் வணக்க முறையை நாம் Veneration என்று அழைக்கிறோம். எனவே, ஆராதனை (Adoration) என்றால் என்ன? வணக்க மரியாதை (Veneration) என்றால் என்ன? என்பதை வித்தியாசப்படுத்திப் பார்க்கத் தவறுவதால்தான், பிரிவினை சகோதரர்கள் புனிதர்களின் வணக்க முறையை விமர்சனம் செய்கிறார்கள்.

புனிதர்களின் உருவங்களை, சுரூபங்களை, படங்களை நமது ஆலயங்களிலும், இல்லங்களிலும் வைத்து, மாலை சூட்டி, நாம் அவற்றிற்கு மரியாதை செலுத்துவதை சிலைவழிபாடு என்று அழைப்பது முற்றிலும் தவறு. சிலைவழிபாடு என்பதை Idolatry என்று சொல்வார்கள். சிலைகளை கடவுளாக பாவித்து அந்த சிலைகளை கடவுளாக ஆராதிப்பதுதான் Idolatry (சிலைவழிபாடு) ஆகும்.

ஆனால், கத்தோலிக்கர்கள் புனிதர்களின் சுரூபங்களுக்கு வணக்கம் செலுத்துவது எதற்கு சமம் என்றால், நமது இறந்துபோன பெற்றோர்களை அன்புகூர்ந்து பாசத்தால் மரியாதையால் அவர்களின் புகைப்படங்களின்மீது மாலை அணிவித்து நமது வணக்கத்தையும், மரியாதையையும் தெரிவிப்பதுபோல ஆகும். புனிதர்களின் சுரூபங்களுக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்துவது, அதையும்விட ஒருபடி மேலானதாகும். ஏனென்றால்,

அவர்கள் தூய்மையான புண்ணிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். எனவே, இறைவனின் பிரசன்னத்தில் மகிமையோடு வாழும் புனிதர்களின் உருவங்களைப் பார்க்கும்போது, அவர்களது முன்னுதாரணமான வாழ்வை நாமும் வாழ தூண்டுதல் பெறுவோம் என்ற காரணத்திற்காகத்தான் நாம் புனிதர்களின் சுரூபங்களை வைத்து வணக்கம் செலுத்துகிறோமே தவிர, அந்த சுரூபங்களை நாம் கடவுளாக ஆராதிப்பதில்லை. ஒரே கடவுளை மட்டுமே நாம் ஆராதிக்கின்றோம் (Latria). புனிதர்களை நாம் ஆராதிப்பதில்லை. எனவே புனிதர்களுக்கு நாம் செலுத்தும் மரியாதை Dulia என்று அழைக்கப்படுகின்றது. புனிதர்களுக்கெல்லாம் புனிதையான மரியாவுக்கு செலுத்தும் வணக்கம் Hyperdulia என்று அழைக்கப்படுகின்றது. மரியா ஒரு கடவுள் அல்ல, மாறாக ஒரு புனிதர். மரியா புனிதர்களுக்கெல்லாம் புனிதர். எனவே, புனிதர்களின் தோழமையில் முதலிடம் பெறும் மரியாவுக்கு நாம் தனிச்சிறப்பாக வணக்க மரியாதை (Hyperdulia) செலுத்துகின்றோம். இந்த மூன்று வகையான கருத்துக்களை நாம் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. கடவுளுக்கு மட்டுமே ஆராதனை (Adoration). இதை நாம் Latria என்று சொல்கின்றோம்.

2. புனிதர்களுக்கெல்லாம் புனிதையான மரியாவுக்கு மாபெரும் வணக்க மரியாதை (Highest Veneration). இதை நாம் Hyperdulia என்று சொல்கின்றோம்.

3. மற்ற எல்லா புனிதர்களுக்கும் நாம் வணக்கம் செலுத்துகின்றோம் (Veneration). இதை நாம் Dulia என்று சொல்கின்றோம்.

கடவுளை எப்படி ஆராதிப்பது? சாதாரண மனிதப் பிறவிகளுக்கு எப்படி வணக்கம் செலுத்துவது? என்பதை வித்தியாசப்படுத்திப் புரிந்துகொள்ள தவறும் ஒருசிலர் இன்று நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் பாலாபிஷேகம் செய்வதும், கோயில் கட்டி வழிபடுவதையும் நாம் பார்க்கின்றபோது, எத்தகைய அறியாமையில் இன்றும் சிலர் வாழ்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளலாம்.

**புனிதர்களின் அன்னை மரியா**

லூக்கா நற்செய்தியில் கபிரியேல் தூதர் மரியாவை, ‘அருள் நிறைந்தவரே’ என்று அழைத்தது மரியாவின் புனிதத்தன்மைக்கு ஒரு மிகப்பெரும் சான்று ஆகும். எலிசபெத்து தனது வீட்டிற்கு வந்த மரியாவைப் பார்த்து, ‘ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்’ (லூக் 1:43-44) என்று வாழ்த்தினார். எனவே, இறைவனின் மகனை தனது வயிற்றில் தாங்கி, பெற்றெடுத்து, புனிதத்தின் மகத்துவத்தில் திளைத்து நின்றவர் மரியா. எனவேதான், மரியாவை நாம் ‘புனிதர்களுக்கெல்லாம் புனிதை’ என்று அழைக்கின்றோம்.

எனவே, மரியா தனது மகன் இயேசுவிடம் நம் அனைவருக்காகவும் பரிந்துபேசுகிறார். எனவே, அந்த மரியன்னையிடம் நாமும் செபிப்போம். அவரைப்போல நாமும் புனிதர்களாக வாழ முயற்சிப்போம்.

இந்த நவம்பர் மாதம் முழுவதும், புனிதர்களின் வேண்டுதல்களை முன்வைத்து, அவர்களின் எடுத்துக்காட்டான வாழ்வின் அடிச்சுவட்டில் நடந்து, நமது மனிதத்தின் மாண்பு, புனிதத்தில் வாழ்வதுதான் என்பதை நாம் பிறருக்கும் அறிவிப்போம்.

புனிதர்களின் அரசியான மரியே வாழ்க!!!





13) போரில் வல்லவர் ஆண்டவர்: -------------------- என்பது அவர் பெயராம்.

14) மோசே மக்களை நோக்கி, ‘அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள்! இன்று ஆண்டவர்தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள்’. இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

15) இதுவரை இருந்திராததும் இனி இருக்கப்போகாததுமான பெரும் புலம்பல் எகிப்து நாடெங்கும் கேட்கும். வசனம் சரியா தவறா?

16) நீங்கள் அதனை உண்ணும் முறையாவது: இடையில் கச்சை கட்டி, கால்களில் காலணி அணிந்து, கையில் கோல் பிடித்து விரைவாக உண்ணுங்கள். இது என்ன?

17) மோசே வானத்தை நோக்கித் தம் கையை நீட்டினார். ---------- நாள்களாக எகிப்து நாட்டைக் காரிருள் கவ்வியிருந்தது.

18) மனிதனுக்கு வாய் அமைத்தவர் யார்? அவனை ஊமையாக அல்லது செவிடாக அல்லது பார்வையுள்ளவனாக அல்லது குருடனாக வைப்பவர் யார்?

19) ஏழுநாள்கள் நீ புளிப்பற்ற அப்பம் உண்ணவேண்டும். ஏழாம் நாளை ஆண்டவரின் விழாவாகக் கொண்டாட வேண்டும். இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

20) எகிப்திய மன்னனாகிய பார்வோன் தன் நாட்டிலிருந்து இஸ்ரயேல் மக்களை அனுப்பிவிடும்படி நீ அவனிடம் போய்ச் சொல் என்றுரைத்தார். இது யார், யாரிடம் கூறியது?

## சென்ற மாதத்தின் விடைகள்: தொடக்க நூல் *26-50*

**1.** 50:3; **2.** 48:11; **3.** 46:20; **4.** 44:15; **5.** 42:22; **6.** 40:10; **7.** 38:27; **8.** 36:43; **9.** 34:9; **10.** 32:2; **11.** 30:6; **12.** 28:13; **13.** 26:22; **14.** 27:4; **15.** 29:16; **16.** 31:13; **17.** 33:10; **18.** 35:6; **19.** 37:4; **20.** 39:21.

***அன்பார்ந்தவர்களே! தயவுசெய்து உங்கள் விடைத்தாள்களோடு முழு முகவரியையும் முடிந்தால் உங்களது அலைபேசியையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.***

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-11-2018

முகவரி

விவிலிய வினாடி வினா போட்டி
பதிப்பாசிரியர் “அப்படியே ஆகட்டும்”
ஜோதி மாதா ஆலயம்
5/301, மாதா கோயில் தெரு,
ஒக்கியம்பேட்டை, சென்னை - 97



# விவிலிய வினா விடை

**நவம்பர் 2018**

## *விடுதலைப்பயணம் 1-20*

ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

1) உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே: ஏனெனில், தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் என்ன செய்வார்?

2) எபிரேயப் பெண்களின் பிள்ளைப் பேற்றின்போது நீங்கள் பணிபுரிகையில் குறிகளைக் கவனியுங்கள்: ஆண்மகவு என்றால் அதைக் கொன்றுவிடுங்கள்: பெண்மகவு என்றால் வாழட்டும். இது யார், யாரிடம் கூறியது?

3) நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைபிடித்தால் அனைத்துலகும் என் உடைமையேயெனினும், நீங்களே எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள். இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

4) 'நான் வேற்று நாட்டில் அன்னியனாய் உள்ளேன்' என்று கூறி மோசே அவனை என்ன என்று பெயரிட்டழைத்தார்?

5) ஆண்டவர் வாழ்த்தப்பெறுவாராக! எகிப்தியர் பிடியினின்றும் பார்வோன் பிடியினின்றும் உங்களை விடுவித்தவர் அவரே. இதைக் கூறியது யார்?

6) 'இங்கே அணுகி வராதே: உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு: ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்' என்றவர் யார்?

7) பாலைநிலத்தில் எனக்கொரு விழா எடுக்குமாறு என் மக்களைப் போகவிடு என இஸ்ரயேலின் -------------- உரைத்துள்ளார்.

8) பார்வோனிடம் பேச்சுவார்த்தை நடத்தியபோது மோசேக்கும் ஆரோனுக்கும் வயது என்ன?

9) இதோ நான் அங்கே ---------------- உள்ள பாறையில் உனக்குமுன் நிற்பேன். நீ பாறையை அடி: மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்.

10) அப்போது மோசே அவர்களை நோக்கி, 'ஆண்டவர் உங்களுக்கு உணவாகத் தந்த அப்பம் இதுவே' இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

11) அவர்களை அனுப்ப நீ மறுத்தால், இதோ நானே உன் நிலப்பகுதியையெல்லாம் எதனால் தாக்கப்போகிறேன் என்கிறார் ஆண்டவர்?

12) எனவே ஆண்டவரிடம் மன்றாடுங்கள். இடிமுழக்கங்களையும் கல்மழையையும் கடவுள் அனுப்பியது போதும்: நான் உங்களைப் போக விடுவேன். 'இனிமேல் நீங்கள் தங்கவே வேண்டாம்' என்றான். இதைக் கூறியது யார்?





# பாவிகள் எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும்!

அருள்பணி. முனைவர். சவரியப்பன் ம.ஊ.ச, பெங்களூரு

தொடக்க நூல் 1:27-28, மனிதன் கடவுளின் உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்டவன் என்பதை "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்"; பாவமற்ற நிலையிலிருந்த அவர்களுக்கு கடவுள் ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றுலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன ஆகிய அனைத்தையும் ஆளுங்கள்" என்ற கட்டளையை எடுத்துரைக்கின்றது. மனிதனைப் பற்றிய உண்மையை வேதாகமம் இங்கு நமக்கு வெளிப்படுத்துகின்றது. கடவுளால் படைக்கப்பட்டவன். அவருடைய சாயல் அவனிடம் இருக்கின்றது. படைப்பை ஆண்டு நடத்தும் வல்லமையை கடவுள் அவனுக்கு அளித்திருந்ததை வெளிப்படுத்துகின்றது. கடவுளின் சிறந்த படைப்பாக மனிதன் இருந்தான்.

சாத்தானின் சூழ்ச்சியால் கடவுளின் கோபத்திற்கும், தண்டனைக்கும் மனிதன் காரணமாகின்றான். தொடக்க நூல் 3:16-19, 23-24, பாவத்தினால் பெண்ணிடம் "உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்; வேதனையில் நீ குழந்தை பெறுவாய், ஆயினும் உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய்; அவனோ உன்னை ஆள்வான்" என்றும் - மனிதனிடம், "உன் மனைவியின் சொல்லைக் கேட்டு உண்ணக் கூடாது என்று தான் கட்டளையிட்டு விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது; உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து உண்பாய். முட்செடியையும், முட்புதரையும் உனக்கு அது முளைப்பிக்கும். வயல்வெளிப் பயிர்களை நீ உண்பாய். நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய். நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கேத் திரும்புவாய்" என பாவத்திற்காக தண்டிக்கப்பட்டதை வெளிப்படுத்துகின்றது.

"மனிதன் இப்பொழுது நம்முள் ஒருவன் போல் நன்மை, தீமை அறிந்தவன் ஆகிவிட்டான், இனி அவன் என்றென்றும் வாழ்வதற்காக வாழ்வின் மரத்திலிருந்தும் பறித்து உண்ணக் கையை நீட்டி விடக் கூடாது". எனவே ஆண்டவராகிய கடவுள் அவன் உருவாக்கப்பட்ட அதே மண்ணைப் பண்படுத்த அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பி விட்டார். அவர் மனிதனை வெளியே துரத்தி விட்டார்... வாழ்வின் மரத்திற்கு செல்லும் வழியைக் காப்பதற்காகக் கெருபுகளையும், சுற்றிச் சுழலும் சுடரொளி வாளையும் வைத்தார். இவ்வாறு மனிதனும் அவன் துணைவியும், கடவுளிடமிருந்து பிரிக்கப்பட்டனர். நன்மை தீமையை பகுத்தறியும் ஆற்றலைப் பெற்றதோடு அவர்கள் சாகாமையை சொந்தமாக்கிக் கொள்ளாமலிருக்கும்

வாழ்வின் கனியை கொடுக்கின்ற மரத்தை அடையும் வழியும் அடைக்கப்படுகின்றது. இந்த வேதவாக்குகளை அடிப்படையாக வைத்து நாம் மனித இயல்பு பற்றியும், மனிதன் உள்ளத்திலிருக்கும் அந்த சாகாமையை அடையும் ஏக்கத்தையும் உணர்ந்து கொள்ள இயலும். எந்த மண்ணிலிருந்து அவர்கள் படைக்கப்பட்டார்களோ அந்த மண் அவர்களினால் சாபத்திற்கு உட்பட்டதால், அந்த மண்ணைப் பண்படுத்தும் பணி ஒப்படைக்கப்படுகின்றது. மனிதன் எவ்வழி கேடுற்றானோ அவ்வழியே ஈடேற்றம் பெற இறைவன் அவனுக்கு வழி வகுக்கின்றார்.

பொதுவாக மனிதர்களைப் பற்றியும் அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? ஏன் இன்று இப்படிப்பட்ட ஒரு நிலை? என்று சிந்தித்து பார்த்தவர்கள் உணர்ந்த உண்மை – மனிதன் கடவுளோடு தொடர்புடையவன், அவருக்குச் சொந்தமானவன், அவரால் ஆட்கொள்ளப்படுகின்றவன், ஆனால் அவருக்கு நிகரானவன் அல்ல என்பதாகும். கடவுளின் குண நலன்கள் அவனில் இருக்கின்றன. ஆனால் அது மாசுபடுத்தப்பட்டுள்ளது. இழந்த ஒரு உயர்ந்த நிலையை மீண்டும் அடைய முயற்சிகள் பல செய்கின்றனர்.

இன்றைய சமுதாயத்தில் குடும்ப மற்றும் பலதரப்பட்ட சூழலில் காணக்கிடக்கின்ற துன்பங்கள், அவல நிலை, இவற்றிற்கெல்லாம் காரணமாகக் கூறப்படுவது அவனுடைய சுயநலம், ஆணவம் மற்றும் அன்பில்லாத அல்லது பாவ சூழ்நிலைகளே ஆகும். துன்பத்திற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் அவை அனைத்திற்கும் அடிப்படையாக, ஆணி வேராக அமைந்திருப்பது மனிதனின் உள்மனத்தில் ஏற்பட்டிருக்கின்ற காயங்கள்தான். அந்த காயங்கள், நம் கிறிஸ்தவ மதத்தில் பாவங்கள் என்று கூறப்படுகின்றது. இந்த காயங்கள் மனிதன் இறைவனோடு கொண்டிருக்கின்ற உறவையும், தன் உடன் பிறப்புகளாகிய சகோதர சகோதரிகளிடத்திலும் நிலவக்கூடிய பரஸ்பர அன்பை வெளிப்படுத்த தடங்களாக அமைகின்றன.

மனிதன் தன் சொந்த முயற்சியால் அல்லது தவ வலிமையால் பந்த பாசங்கள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, பாவத்திற்கு காரணிகளாகிய அகங்காரம், சுயநலம் இவற்றின் மேல் வெற்றி கொண்டு, அனைவரையும் அன்பு செய்கின்ற நிலையை அடைய ஆசிக்கின்றான். தன்னுடைய உண்மையான நிலை அல்லது இயல்பை அறிய ஒவ்வொருவரும் முயற்சி செய்து கொண்டுதான் இருக்கின்றனர். பாவம் ஒருவனை தன்னுடைய உண்மை சுபாவத்தை மறந்து கொள்ள இடையூராக இருக்கின்றது. பாவம் அல்லது மாயையில் உழன்று கொண்டிருக்கின்ற மானிடம் உண்மை நிலைக்குச் சென்றடையக் கூடிய வழியையும், வலிமையையும் தேடிக்கொண்டிருக்கின்றது. அதற்கான வழியையும், உண்மை நிலையையும் மறந்து உழலுகின்ற மானிடத்திற்கு கிறிஸ்து தோன்றி, அன்பைப் பற்றி எடுத்துரைத்து, உறவுகளை மேம்படுத்த வழிகாட்டிச் சென்றார். அன்பின் ஆழத்தை உணர்த்த தன் உயிரையே தியாகம் செய்யவும் தயங்கவில்லை.

பாவ நிலையை விட்டு அல்லது பாவத்தினுடைய மாசிலிருந்து விடுபட்டால்தான் மனிதன், தான் பிறந்த மண்ணிற்குத் திரும்பும்போது, மண்ணிலிருந்து தன்னைப் படைத்த இறைவனிடம் ஒன்றிக்க முடியும்.





# "அப்படியே ஆகட்டும்" மாத இதழின் வளர்ச்சிக்காக நன்கொடை வழங்கியவர்கள்

| பெயர் | ஊர் | தொகை |
|---|---|---|
| மரிய செபாஸ்டின் | சென்னை | ரூ. 500 |
| ஆண்டோ திவ்யன் | திருப்பத்தூர் | ரூ. 200 |
| செசிலியா | சென்னை | ரூ. 500 |
| இந்திரா சஞ்சீவி | சென்னை | ரூ. 500 |
| பிரீத்தி செரியன் | சென்னை | ரூ. 500 |
| நவீன் குமார் | சென்னை | ரூ. 500 |

நன்கொடை வழங்கிய தாராள உள்ளங்களுக்கு நன்றி. இறைவன் உங்கள் உள்ளத்தையும் இல்லத்தையும் ஆசிர்வதிக்க வாழ்த்துகளும் செபங்களும்.

**அன்பார்ந்த வாசகர்களே! உங்களது சந்தாவையும், நன்கொடையையும் அனுப்ப வேண்டிய முகவரி**

**"அப்படியே ஆகட்டும்"**
**ஜோதி மாதா ஆலயம்**
**5/301, மாதா கோயில் தெரு,**
**ஒக்கியம்பேட்டை, சென்னை - 97**

**Bank Details**

**NAME: APPADIYE AGATTUM**
**NEFT: A/C No. 0683073000000080**
**IFSC: SIBL0000683**
**South Indian Bank, Sholinganallur**
**Pl.Call & Confirm: 8680860308**

வேண்டுமென்று அழைக்கின்றது. நீதியின் தளிர் ஒன்று நமக்காக துளிர்விடப் போகின்றது. இதே நம்பிக்கையோடு திருப்பலியில் இணைவோம்.

### முதல் வாசக முன்னுரை

நீதியின் தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன் (எரே 33:15). இன்றைய முதல் வாசகம், நம் வாழ்வில் வசந்த காலம் வரப்போகின்றது என்ற நம்பிக்கையை விதைக்கின்றது. ஆண்டவர் இறைவாக்கினர் எரேமியா வழியாக புது வாழ்வை, விடுதலையைத் தந்து, தனது உடன்படிக்கையை, வாக்குறுதிகளை நிறைவேற்றித்தர புதிய தளிர் ஒன்றை முளைக்கச் செய்வதாகக் கூறுகிறார். இவ்வாசகத்தை கவனமுடன் செவிகொடுத்து இறையருளைப் பெற்றுக்கொள்வோம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அவர் உங்கள் உள்ளங்களை உறுதிபடுத்துவாராக (1தெச 3:13). இன்றைய இரண்டாம் வாசகம் புனித பவுலடிகளார் கடவுளுக்கு உகந்த ஒரு வாழ்வை நாம் அனைவரும் வாழ வேண்டும் என்றும், அதற்கான மனஉறுதியை இறைவனே நமக்கு அருள்வார் என்றும் கூறுகிறார். நாம் தூய மனம் கொண்டவர்களாகவும், அன்பு மனம் கொண்டவர்களாகவும் வாழ அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### மன்றாட்டுகள்

1. அன்பின் இறைவா! புதிய திருவழிபாட்டு ஆண்டைத் தொடங்கும் எம் திரு அவையை ஆசிர்வதியும். திருவருகைக் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து திரு அவைத் தலைவர்கள் அனைவரும் மீட்பர் இயேசுவை சந்திக்கத் தேவையான தூய உள்ளத்தைப் பெற்று வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. உண்மையின் இறைவா! எம் நாட்டுத் தலைவர்கள் சமத்துவமிக்க சமுதாயம் படைக்க, தன்னலம் மறந்து பிறர்நலனில் அக்கறை கொண்டு, மக்களின் நல்வாழ்விற்காக உழைத்திடும் நல் உள்ளத்தை தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நீதியின் இறைவா! அனைத்து மக்களும் சகோதர அன்பில் நிலைத்து நின்று தூய மனம் கொண்டு, மீட்பர் இயேசுவை தங்கள் வாழ்விலும், குடும்பங்களிலும் மையமாகக் கொண்டு நம்பிக்கை வாழ்வு வாழ்ந்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. சுகம் தரும் இறைவா! உடல் நலமின்றி வாழும் சகோதர சகோதரிகள் உம் வருகையால் நலமும், வளமும் பெற்று மனநிறைவும் மகிழ்ச்சியும் பெற்று வாழ்ந்திடத் தேவையான அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.










தன்னால் சாபத்திற்கு உட்படுத்தப்பட்ட மண்ணை பண்படுத்தி, அதைச் சாபத்திலிருந்து விடுவிக்கவும், தானும் சாபத்திலிருந்து விடுபடவும் முடியும் என்ற நியதியை கடவுள் கொடுத்ததாகத் தொடக்க நூலில் பார்க்கின்றோம்.

ஏவாள் என்ற ஒரு பெண் மனித குலத்தின் பாவத்திற்கு காரணமாக இருந்தது போல் இன்னொரு பெண்ணால் பாவத்திலிருந்து விடுதலை பெற இறைவன் திட்டமிட்டார் (தொ. நூல் 3:15). மரியாள் என்ற பெண் வழியாக மீட்பராகிய கிறிஸ்து தோன்றி இந்த பாவ விமோசனம் கிடைத்தது. இயேசுவின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு மனிதனுக்கு முழுமையான மீட்பைப் பெற்றுக் கொடுத்திருந்தாலும், 'பாவத்திலிருந்தும், பாவ மாயையிலிருந்தும் மனிதன் இம்மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு நாளும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அன்னை மரியாளிடம் "பாவிகள் எங்களுக்காக இப்போதும் எங்கள் மரண நேரத்திலும்" வேண்டிக்கொள்ளுங்கள் என்று அன்னை மரியாவின் பரிந்துரையை கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் நாடுகின்றனர்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தந்தையர்கள் மரியாவின் பரிந்துரையை பற்றி எடுத்துரைக்கும் போது, இந்த சமுதாயத்தில் துன்பப்படும் ஒவ்வொரு சகோதர, சகோதரியின் வாழ்விலும் கிறிஸ்துதான் துன்பப்படுகிறார் என்றும், அந்த துன்புறும் சகோதர, சகோதரிகள் இருக்கும் வரையில் மரியாள் அவர்களோடு உடனிருப்பாள் என்றும் கூறுகின்றார்கள். எனவே பாவத்தினால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் மரியாவின் பாதுகாப்பையும், அவரது ஆதரவையும் நாடுகின்ற நிலையை இம்மன்றாட்டு வெளிப்படுத்துகின்றது. கிறிஸ்துவினுடைய பாவிகளை மீட்கும், மீட்பின் வல்லமையால் சென்மப்பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டாள் மரியாள். சாத்தானின் சூழ்ச்சியாலும், மாயக்கவர்ச்சிகளாலும், கடவுளை விட்டகன்றதால் அன்பை வெளிப்படுத்துகின்ற பண்பை இழந்து, தானும் துன்புற்று, மற்றவர்களையும் துன்பத்திற்கு உட்படுத்தும் நிலைக்கு ஆளாகியிருக்கின்ற மனித சமுதாயத்தின் மீட்பிற்கு, மரியாவின் பரிந்துரையை நாடும்போது, அவள் பாவத்திலிருந்து விடுபடவும், பாவத்தின் மீது வெற்றி கொண்ட கிறிஸ்துவை அனுகிவரவும் உதவுவாள் என்ற உண்மையையும் இம்மன்றாட்டு வெளிப்படுத்துகின்றது.

மரியாள் இயேசுவின் தாய் என்ற நிலையிலும், இம்மண்ணுலகில் வாழ்கின்ற அனைத்து மானிடரின்தாய் என்ற அடிப்படையிலும், மனுக்குலத்தின் மீட்பில் அக்கறைக் கொண்டவள். இம்மண்ணகத்தில் பயணிக்கின்ற திரு

அவையின் உறுப்பினர்களாகிய கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் மாசற்றவர்களாக மாறி கடவுளின் சாயலும், உருவும் முழுமை பெற பரிந்து பேசுபவள் என்று திரு அவை விசுவசிக்கின்றது. தந்தையாகிய கடவுளிடம் நம் சார்பாக பரிந்து பேசும் மத்தியஸ்தராக கிறிஸ்து இருக்கின்றார். மரியாவின் பரிந்துரை இன்றி நாம் மீட்பு பெற முடியும். மரியாவின் பரிந்துரை கிறிஸ்துவின் பரிந்துரையை குறைப்பதுமில்லை அதை மிகைப்படுத்துவதுமில்லை. அதே சமயம் மரியாவின் பரிந்துரையை மக்கள் தேடிப் பெற்றுக் கொள்கின்றனர். துன்பப்படும் சூழலிலும், கடவுளை விட்டகன்றிருக்கின்ற சூழலிலும், மரியாவிடம் நாம் மன்றாடும் போது அவள் நம்மை கடவுளிடம் பாதுகாப்பாய்க் கொண்டு சேர்ப்பாள் என்பதை மக்களின் செப, தவ முயற்சிகள் வெளிப்படுத்துகின்றன.

கிறிஸ்துவின் மண்ணுலக வாழ்வில், அவர் பணி வாழ்வை நிறைவுக்கு கொண்டுவர மரியா உடன் பயணித்தாள். அவள் வாழ்வு கிறிஸ்துவை மையப்படுத்தி அமைத்திருந்தது போல், அவருடைய விண்ணேற்பிற்கு பின், அவர் பணியை செய்ய அழைக்கப்பட்ட திருத்தூதர்களின் வாழ்வை மையப்படுத்தியதாக மாறியது. இன்று வாழும் கிறிஸ்துவாகிய நம் ஒவ்வொருவருடைய பணியைச் செய்ய, அதை நிறைவுக்குக் கொண்டுவர நம்முடனிருப்பவள். உலகம் முடியும்வரை எந்நாளும்நான் உங்களோடு இருப்பேன் (மத் 26:18) என்ற கிறிஸ்துவின் பிரசன்னத்தோடு மரியாவின் பரிந்துரைக்கின்ற பிரசன்னம் தொடர்கின்றது.


மரியாவின் பிறப்பு, இறைத்திட்டத்தை நிவைேற்ற கிறிஸ்து மனவுரு எடுப்பதற்காகவும், கிறிஸ்துவின் பிறப்பு, கீழ்ப்படியாமையால் இறையுறவை இழந்த மனிதனை மீட்பதற்காகவே. மனிதரின் மீட்பில் அக்கறைக் கொண்ட தந்தையாகிய இறைவனின் திட்டம், மனித பிறவியையே, மனித பிறவியை மீட்கக் கூடிய மீட்பரை உருவாக்க பயன்படுத்துகின்றார். உலகிற்கு மீட்பரைக் கொணர்ந்த மரியாவிடம் மனுக்குலம் நன்றிக்கடன் பட்டிருக்கின்றது. கிறிஸ்துவிடம் நன்றிக்கடனை மக்கள் தெரிவிக்கிறார்களோ இல்லையோ, மரியாவிடம் தங்கள் நன்றிக் கடனை தெரிவிக்கின்றனர். ஆதிபெற்றோர் பாவத்தினால் இழந்த அருள்வாழ்வை கிறிஸ்து மீண்டும் மனிதனுக்கு பெற்றுத்தந்திருக்கிறார். அதை தன் வாழ்நாளிலும், தன் இறப்பிலும் இழக்காமலிருக்க மரியாவிடம் மக்கள் செபிப்பதில் வியப்பொன்றுமில்லை.

மரியா இயேசுவின் தாய் மட்டுமல்ல, நம் அனைவரின் தாய். மரியா நம் மண்ணுலகப் பயணத்தில் பாதுகாப்பாய், பாவ பிடியிலிருந்து விடுபட்டு, கடவுளின் மீட்புத்திட்டத்தை நம் வாழ்வில் நிறைவுக்கு கொண்டு வர அவரிடம் மன்றாடுவது, ஒரு குழந்தை தாயின் உதவியை நாடுவது போன்றதுதான். தாயின் அன்பை அனுபவித்த ஒவ்வொரு மனிதப் பிறவியும் மரியாவின் அன்பையும் அனுபவிக்கிறார்கள். அந்த நம்பிக்கை அனுபவத்தையே தாங்கள் செபத்திலும் வெளிப்படுத்துகின்றனர். அனைத்திற்கும் காரணமாகிய இறைவனை அடைய, அன்னை மரியாவின் உதவியை நாம் எப்பொழுதும் நாடுகின்றோம். அதற்கு அவள் பரிந்துரை துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.





## இரண்டாம் வாசக முன்னுரை



அன்புக்குரியவர்களே! இன்றைய இரண்டாம் வாசகம் திருவெளிப்பாடு நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நம் ஆண்டவர் மண்ணுலக அரசர்களுக்கெல்லாம் தலைவர் என்பதையும், அவரே தொடக்கமும் முடிவும் என்பதையும் வெளிப்படுத்தும் இவ்வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

## மன்றாட்டுகள்

1. திரு அவையின் பேரரசரே எம் இறைவா! உமது அரசின் மகிமை இம்மண்ணுலகு முழுவதும் பரவிட உழைக்கும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம் அன்பில் என்றும் பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அனைத்தையும் பாதுகாக்கும் அரசரே எம் இறைவா! உம்மைப் பற்றியும், உமது இறையாட்சி பற்றியும் நாங்கள் அறிந்துள்ளவற்றை எம் வாழ்வில் வாழ்ந்து காட்டி உம்மைப் பின்பற்றுபவர்கள் நாங்கள் என பறைசாற்றிடத் தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அரசர்களுக்கெல்லாம் அரசரே எம் இறைவா! உமது திருவுளப்படி எம் நாட்டுத் தலைவர்கள் செயல்பட்டு அதன்மூலம் எமது நாட்டில் அமைதி, ஒற்றுமை, உயர்வு ஆகிய பண்புகளோடு எம் நாடு சிறந்து விளங்கிட அருள் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. உண்மையின் ஒளிவிளக்கே எம் இறைவா! உமது இறையாட்சியின் பயனை இம்மண்ணுலகில் சிறப்பாகச் செய்திடத் தேவையான இறையழைத்தலை இங்கே கூடியுள்ள எங்களில் பலருக்கும் கொடுத்து, திரு அவையில் பணிபுரிய மென்மேலும் நல்ல ஆட்களை அனுப்பிவைக்க வேண்டுமாய் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருவருகைக்காலம் முதல் ஞாயிறு 02-12-2018
## (எரே 33:14-16; 1தெச 3:12-4:2; லூக் 21:25-28,34-36)

## திருப்பலி முன்னுரை

'உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது' (லூக் 21:28). கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு வழியாக புதிய திருவழிபாட்டு ஆண்டை நாம் துவங்குகின்றோம். திருவருகைக் காலம், மீட்பின் காலம், கடவுளின் பேரன்பு ஒரு குழந்தையாய் நம் கண்முன்னே காட்சி தரும் ஒரு உன்னத அனுபவம். காலம் காலமாய் காத்திருந்த மீட்பரை நம்மில் ஒருவராக, நம்மோடு, நமக்காக வாழ வரும் இயேசுவை முழுமையாய் அனுபவிக்க கிடைத்த ஒரு அரிய வாய்ப்பு. மீட்பு நெருங்கி வருகின்றது என்று நமக்கு நல்ல செய்தி கிடைத்துள்ளது. தூய மனமும், நீதியும், உண்மையும், விழிப்பான மனநிலையும் நாம் பெற

நம் பெயர் ஜீவப்புத்தகத்தில் இடம்பெறும் என ஏராளமான விண்ணக இரகசியங்களை வெளிப்படுத்தும் இவ்வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! எபிரேயருக்கு எழுதப்பட்டத் திருமுகத்திலிருந்து இன்றைய இரண்டாம் வாசகம் எடுக்கப்பட்டுள்ளது. என்றென்றும் தலைமை குருவான நம் ஆண்டவர் இயேசுவின் பலியின் பெருமையையும் மகத்துவத்தையும் எடுத்துரைக்கும் இவ்வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

### மன்றாட்டுகள்

1. விண்ணுலக அரசரே எம் இறைவா! உம் விண்ணுலக ஆட்சியை இம்மண்ணுலகில் பரப்பி வரும் எம் தாய் திரு அவையை ஆசிர்வதியும். எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் உமக்கான வாழ்வு வாழ்ந்து, நல்ல பல முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி காண அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நல்வழி காட்டும் இறைவா! எம் பங்கிலுள்ள அனைவரும் உம் வார்த்தையின் மகத்துவத்தை உணர்ந்து, இறைவார்த்தை மீது பற்றுகொண்டு, உம் அன்பு வாழ்வு வாழத் தேவையான வரம் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. எல்லாம் வல்ல இறைவா! எம் தாய் நாட்டின் வளர்ச்சிக்காக பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள அனைவரையும் ஆசிர்வதியும். அவர்களுக்குத் தகுந்த வழிகாட்டி, நாட்டின் வளர்ச்சிக்கு அவர்கள் தொடர்ந்து உழைத்திடும் ஆற்றல் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. வாழ்வின் ஊற்றே இறைவா! உமக்காகவும் உம் மக்களுக்காகவும் உழைத்து மரித்த மறைசாட்சிகள், இறையடியார்கள், காவல் மற்றும் இராணுவ வீரர்களின் ஆன்மாக்களுக்கு நித்திய இளைப்பாற்றி அளித்தருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## கிறிஸ்து அரசர் பெருவிழா 25-11-2018
## (தானி 7:13-14; திவெ. 1:5-8; யோவான் 18:33-37)

### திருப்பலி முன்னுரை

அனைத்துலக அரசராம் இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே! இன்று நாம் அனைவரும் திரு அவையாக இணைந்து நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து – அனைத்துலகின் அரசர் என்ற பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். விண்ணுலகு, மண்ணுலகு, கீழுலகு என அனைத்துலகில் இருக்கும் எல்லாமே நம் ஆண்டவரின் திருப்பெயருக்கு மண்டியிடும். ஆவரின் ஆட்சிக்கு அனைத்துமே உட்பட்டது. அவரது ஆட்சி அன்பின் ஆட்சி, நீதியின் ஆட்சி, இறையாட்சி என்பதை இவ்வுலகுக்குப் பறைசாற்றிட இன்றைய பெருவிழா நம்மை அன்போடு அழைக்கின்றது.

பேரரசரும் என்றென்றும் நிலையான குருவுமான நம் ஆண்டவரின் ஆட்சி நமது வீட்டிலும் நாட்டிலும் நடைபெற அருள் வேண்டியவர்களாய் இந்த அன்பின் பலியில் நன்றியுணர்வோடு பங்கெடுப்போம்.

### முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! இன்றைய முதல் வாசகம் தானியேல் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. மானிடமகனான நம் ஆண்டவர் இயேசுவின் அரசாட்சியைப் பற்றி தான் கண்ட காட்சியை தானியேல் எடுத்துரைப்பதை இவ்வாசகத்தின் மூலம் கேட்டறிவோம்.





## திருத்தந்தையின் தேவதாய்ச் சிந்தனைகள்



அருள்பணி. அமல்
ம.ஊ.ச.
உரோமை

## மரியன்னை பக்தியானது இயேசுவினுடைய விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது

"இதோ, உன் தாய்" என்ற அவருடைய வார்த்தைகளில் திரு அவை கன்னி மரியாளை ஒரு தாயாக ஏற்று அவளுடைய உண்மையான பிள்ளைகளாக வாழ்வதற்கானதொரு அழைப்பு என்பதனை அனைவரும் கண்டுகொள்ள வேண்டும்.

1. "இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், 'அம்மா, இவரே உம் மகன்' என்றார். பின்னர் தம் சீடரிடம், 'இவரே உம் தாய்'" (யோவா 19,26 27) என்ற வார்த்தைகள் மூலம் யோவானிடம் மரியாளை ஒப்படைக்கின்றார். இந்த வார்த்தைகளைக்கூறி மரியாளுடைய தாய்மையின் மகத்துவத்தை இயேசு அவளுக்கு வெளிப்படுத்துகின்றார். மீட்பரின் அன்னை என்ற வகையில், அவள் மீட்படைந்தோரின் தாயாகவும் அவளுடைய மகனுடைய மறையுடலான திரு அவையின் உறுப்பினர்கள் அனைவருடைய தாயாகவும் இருக்கின்றார்.

கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு நிகழ்வில் அவளுடைய நம்பிக்கையினுடைய பதிலாக ஏற்கனவே "அப்படியே ஆகட்டும்" என்ற பதிலைத் தந்ததன்மூலம், அருளின் கொடையாகிய தாய்மை என்னும் மிக உன்னதமான நிலைக்கு அவர் உயர்த்தப்படுவதை அவள் அமைதியில் ஏற்றுக்கொள்கின்றார்.

இயேசு யோவானை ஒரு சிறப்பான அன்போடு மரியாளைக் கவனித்துக்கொள்ளத் தூண்டுவதோடு மட்டுமல்லாமல், அவருடைய சொந்தத் தாயாக அவளை ஏற்றுக்கொள்ளும் வகையில் அவளை அவரிடம் ஒப்படைக்கின்றார். இறுதி உணவின்போது "இயேசுவின் அன்புச் சீடர்" அவருடைய குருவினுடைய "நான் உங்களை அன்பு செய்தது போல, நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள்" (யோவா 15,12) என்ற கட்டளைக்குச் செவிகொடுத்தார், மேலும் தன்னுடைய தலைவருடைய மார்பில் தன் தலையை சாய்த்து வைத்திருந்ததன் வழியாக அவரிடமிருந்து தனிப்பட்டதொரு அன்பின் அடையாளத்தை அவர் பெற்றுக்கொண்டார். இந்த அனுபவமானது அவரால் அவருக்குத் தாயாக கொடுக்கப்பட்ட மரியாளை ஏற்றுக்கொள்வதற்கும், இயேசு ஒரு மகனுக்குரிய பாசத்தோடு அவளை அன்பு செய்ததுபோல, யோவானும் அவளை பாசத்தோடு அன்புசெய்ய வேண்டும் என்பதற்குமானதொரு அழைப்பாக இயேசுவினுடைய

வார்த்தைகளை மிக நன்றாக அவர் புரிந்துகொள்வதற்கும் அவரைத் தயார்படுத்தியது.

"இதோ, உன் தாய்" என்ற இயேசுவினுடைய வார்த்தைகளில் மரியாளுடைய உண்மையானப் பிள்ளைகளாக அவளுடைய தாய்மை அன்பிற்கு பதிலலிக்கும் வகையில் அவளை அன்னையாக எற்றுக்கொள்வதற்கான அழைப்பை அனைவரும் கண்டுகொள்ள வேண்டும்.

**கன்னி மரியாள் ஆண்டவரை மிக ஆழமாக அன்பு செய்வதற்கு நமக்குக் கற்றுத்தருகின்றாள்**

2. தம் அன்னையை அவருடைய அன்புச் சீடரிடம் ஒப்படைக்கும் இந்த நிகழ்வின் அடிப்படையில் திரு அவைக் குழுமத்தில் மரியன்னை பக்திக்கான உண்மையான அர்த்தத்தை ஒருவர் புரிந்துகொள்ள முடியும். உண்மையில், இது இயேசுவோடும் மரியாளோடும் உள்ள நெருக்கமான உறவில் வளர்வதற்கான சூழ்நிலையில் வைத்து, இயேசுவினுடைய தாய்க்கான உறவில் கிறிஸ்தவர்களை இணைக்கின்றது.

கன்னி மரியாளுக்கான திரு அவையினுடைய பக்தியானது அவளுடைய ஆளுமையினுடைய சிறப்புமிக்க மதிப்பீட்டிற்கான தனிச்சையான பதிலின் விளைவாகவோ அல்லது மீட்புப் பணியில் அவளுடைய முக்கியமான பங்களிப்பின் விளைவாகவோ மட்டுமல்லாமல், கிறிஸ்துவினுடைய விருப்பத்தின் அடிப்படையிலும் இருக்கின்றது.

"இதோ, உம் தாய்!" என்ற வார்த்தைகள், சீடர்கள் மரியாளை அவர்களுடைய தாயாக மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவருடைய தாயாக அங்கீகரித்து, அவர்களில் மரியாளின் மீதான நம்பிக்கை மற்றும் அன்பினைத் தூண்டச் செய்கின்ற கிறிஸ்துவினுடைய மனநிலையின் வெளிப்பாடாகவே இருக்கின்றன.

கன்னி மரியாளுடைய பள்ளியில், யோவானைப் போன்று மற்ற சீடர்களும் ஆண்டவரை மிக ஆழமாக அறிந்துகொள்வதற்கும் அவரோடு நெருங்கிய மற்றும் நீடித்த உறவு வைத்துக்கொள்வதற்கும் கற்றுக்கொள்கிறார்கள். மேலும் அவர்கள் பாசம் மிகுந்த பணிவான குழந்தைகளாக வாழ்ந்து, அந்த அன்னையின் தாய்மை அன்பிற்குத் தங்களையே கையளிப்பதன் மகிழ்ச்சியை அவர்கள் கண்டுகொள்கிறார்கள்.

கிறிஸ்தவ பக்தி முயற்சியினுடைய வரலாறானது கிறிஸ்துவை நோக்கி அழைத்துச்செல்லும் வழியாக மரியாள் இருக்கின்றாள் என்றும், ஒரு குழந்தை தன் தாயிடம் செலுத்துவதைப்போன்று அவளுக்குச் செலுத்துகின்ற பக்தியானது கிறிஸ்துவோடுள்ள அந்த நெருக்கத்தில் எந்தவித பாதிப்புகளையும் ஏற்படுத்துவதில்லை: உண்மையில், இது அதை அதிகப்படுத்துகின்றது மற்றும் முழுமையை நோக்கிய உச்ச நிலைக்கு அழைத்துச் செல்கின்றது.

உலகெங்கும் இருக்கின்ற எண்ணற்ற மரியன்னைப் பேராலயங்கள், ஆண்டவரின் தாயும் நமது தாயுமான மரியாளுடையப் பரிந்துரை வழியாக அவருடைய அருளினால் நடைபெற்ற அற்புதங்களுக்கான சாட்சியாகும்.

அவளுடைய பாசத்தினால் கவரப்பட்டு அவளிடம் செல்பவர்களுக்கு நமது காலத்தில் வாழும் ஆண்களும் பெண்களும் அவர்களுடைய வாழ்வின் ஆண்டவரும் மீட்பருமான இயேசுவைச் சந்திக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஏழைகள், சுமை சுமந்து சோர்ந்து போனவர்கள், அவர்களுடைய அனபிற்கானத் தேடலிலும் அவர்களுடைய பொருளாதாரத் தேவையிலும் இறைவனின் தாயில் அடைக்கலம் மற்றும்





## மன்றாட்டுகள்

**1.** நிலையான ஆசியை நிறைவாய் தரும் இறைவா! எம் தாயாம் திரு அவையையும், அதிலுள்ள அனைவரையும் குறிப்பாக எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம் அன்பாலும் ஆசியாலும் நிறைவாக நிரப்பிட வேண்டுமாய் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2.** நல்ல ஆயரே எம் இறைவா! இங்கே கூடியிருக்கும் எங்கள் ஒவ்வொருவரையும், எங்கள் பங்கிலுள்ள அனைவரையும் ஆசிர்வதியும். நாங்கள் அனைவரும் நல்ல மனதோடு எங்களிடம் இருப்பவற்றை பிறரோடு பகிர்ந்து வாழும் பாக்கியம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3.** நல்வாழ்வை வழங்கும் இறைவா! எம் நாட்டில் பசி, பிணி, போராட்டங்கள், இழப்புகளால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் நீரே ஆறுதலாக இருந்து அனைவருக்கும் தேவையானவை கிடைத்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4.** நிலைவாழ்வின் ஊற்றே இறைவா! எங்கள் குடும்பங்களில் மரித்த ஒவ்வொரு நம்பிக்கையாளர்களின் ஆன்மாவையும் நீரே உம் வான் வீட்டில் வரவேற்று நிலையான வாழ்வில் அவர்களுக்கும் பங்களித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 33 ஆம் ஞாயிறு 18-11-2018
## (தானியேல் 12:1-3; எபி 10:11-14,18; மாற்கு 13:24-32)

## திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசுவுக்குள் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே! 'விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும்; ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா' என்று கூறிய வார்த்தையான இறைவனின் சந்நிதானத்தில், ஆண்டின் பொதுக்காலத்தின் 33 ஆம் ஞாயிறை சிறப்பிக்கக் கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இன்றையத் திருவழிபாடு நம் ஆண்டவரின் அரசாட்சியைப் பற்றி எடுத்துரைப்பதோடு, அதில் நாம் நுழைய வேண்டுமெனில் விழிப்பாயிருந்து இறைவிருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என வழிகாட்டுகின்றது.



இறைவனின் திருப்பலியில் பங்கெடுக்க வந்திருக்கும் நம்மை இறைவன் ஆசிர்வதிக்கும்படியும், இறையாட்சியில் பங்குபெறும் பாக்கியம் வேண்டியும் இந்த தியாகப்பலியில் உருக்கமாய் வேண்டி பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

அன்புக்குரியவர்களே! இன்றைய முதல் வாசகம் தானியேல் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நிலைவாழ்வு பெற நாமனைவரும் நல்லவர்களாய் வாழ வேண்டும். அப்போது



# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆல்பர்ட் ம.ஊ.ச, ஜீவமாதா இல்லம், தஞ்சாவூர்.

## பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறு 11-11-2018
## (1அர 17:10-16; எபி 9:24-28; மாற்கு 12:38-44)


### திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 32 ஆம் ஞாயிறை நாம் அனைவரும் இணைந்து கொண்டாடுகின்றோம். நம்முடைய வாழ்வில் பெரும்பாலும் கடவுளுக்கென்று ஒரு தனி சிறப்பிடம் கொடுத்திருக்கின்றோம். அவருக்கான காரியங்களுக்கு நம்மால் இயன்றவரை முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இதை நம் ஆண்டவர் ஏற்றுக்கொண்டு அதற்கான ஆசிர்வாதத்தை நமக்கு கொடுக்கின்றார் என்பதை தெளிவுபடுத்தி உறுதிபடுத்துகின்றது இன்றையத் திருவழிபாடு.

ஆண்டவரிடம் வந்திருக்கும் நாம் அனைவரும் நம்மிடம் உள்ள திறமைகளையும், நற்குணங்களையும் காணிக்கையாக்குவோம். கடவுளின் காரியங்களுக்கு நம்மை தாராளமாய் ஒப்புக்கொடுப்போம். நம்மிடமுள்ள அனைத்தையும் ஆசிர்வாதமுள்ளதாக மாற்றிக்கொள்வோம். இதற்குத் தேவையான நல் மனதையும் இறைதிருவுளத்தையும் இன்றையத் திருப்பலியில் மன்றாடுவோம்.

### முதல் வாசக முன்னுரை

அன்புக்குரியவர்களே! அரசர்கள் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து இன்றைய முதல் வாசகமானது எடுக்கப்பட்டுள்ளது. சாரிபாத்திலிருந்த ஏழைக் கைம்பெண் தன்னிடம் இருந்ததிலிருந்து இறைவாக்கினர் எலியாவுக்கு கொடுத்து இறையாசியை நிறைவாய் பெற்றுக்கொண்டதுபோல நாமும் இறையாசி நமக்கு கிடைக்க வேண்டியவர்களாய் இவ்வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.



### இரண்டாம் வாசக முன்னுரை

அன்புக்குரியவர்களே! இன்றைய இரண்டாம் வாசகமானது எபிரேயருக்கு எழுதப்பட்டத் திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றியும் தியாகங்களைப் பற்றியும் எடுத்துரைக்கும் இவ்வாசகத்திற்கு மனம் திறந்து செவிசாய்ப்போம்.





அமைதியைக் காண்கிறார்கள், மேலும் மனமாற்றத்தினுடைய அருளிலும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலும்தான் எல்லா மக்களுக்குமான உண்மையான செல்வங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டுகொள்கின்றார்கள்.

**ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனுடைய அன்றாட வாழ்வில் மரியாளுக்கானதொரு இடத்தைக் கொடுக்க வேண்டும்**

3. கிரேக்க மூலத்தின்படி, விவிலிய ஏடானது: "அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" (யோவா 19,27), இவ்வாறு யோவானுடைய தாயாரான நிலையும் இயேசுவினுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கும் அந்த தாராளமான விசவாசத்தை வலியுறுத்துகின்றது மற்றும் அவருடைய வாழ்வு முழுவதும் ஒரு உண்மையுள்ள பாதுகவலராக மற்றும் கன்னியினுடைய பாசத்தற்குரிய மகனாக அவர் நடந்துகொள்வதையும் பற்றி நமக்கு அறிவிக்கின்றது.

யோவான் மரியாளை தன்னுடைய இல்லத்தில் ஏற்றுக்கொண்ட அந்த நேரம்தான் மீட்புப் பணியினுடைய நிறைவாக இருந்தது. மிகச்சரியாக, இந்தச் சூழலில்தான் மரியாளுடைய ஆன்மீகத் தாய்மையும், அவளுக்கும் ஆண்டவர் இயேசுவினுடைய சீடர்களுக்கும் இடையேயானதொரு புதிய இணைப்பின் முதல் வெளிப்பாடும் தொடங்குகின்றது.

யோவான் அந்தத் தாயை "அவருடைய உடைமைகளுள்" எடுத்துக்கொண்டார். ஓரளவுக்குப் பொதுவான இந்த வார்த்தைகள் அவருடைய முயற்சியை வெளிச்சமிட்டுக் காட்டக்கூடியவையாக, மரியாதையும் அன்பும் நிறைந்தவையாக, மரியாளை அவருடைய வீட்டில் ஏற்றுக்கொள்வதில் மட்டுமல்லாமல் அவளோடு உள்ள அந்த உறவில் அவருடைய ஆன்மீக வாழ்வை வாழ்வதிலும் இருப்பதாகத் தோன்றுகிறது.

உண்மையில், கிரேக்க விவிலியத்தின் சொற்களை அடிப்படையாகக் கொண்ட மொழியாக்கமான "அவருடைய உடைமைகளுள்" என்கின்ற வாக்கியமானது பொருட்களை உடைமையாக்கிக் கொள்ளுதல் என்கின்ற அர்த்ததைக் குறிக்கவில்லை, ஏனெனில் புனித அகுஸ்தினாரின் பார்வையில் புனித யோவான் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆன்மீகப் பொருட்கள் மற்றம் கொடைகளைத் தவிர "அவருக்கென்று எதையுமே உடைமையாக வைத்திருக்கவில்லை" (*Ioan Evang.trac.* 119,3): அருள் (யோவா 1,16), வார்த்தை (யோவா 12, 28;17,18), ஆவி (யோவா 7,39;14,17), நற்கருணை (யோவா 6,32-58)... கிறிஸ்துவால் அன்பு செய்யப்பட்ட சீடர் என்கின்ற வகையில் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட இந்தக் கொடைகளுள், மரியாளுடன் ஆழமானதொரு உறவை ஏற்படுத்திக்கொண்டு அந்த அன்புச் சீடர் அவளைத் தன்னுடையத் தாயாக ஏற்றுக்கொள்கின்றார் (cf. *Redemptoris Mater*, n.45, note 130).

இயேசுவின் அன்புச் சீடரான யோவானின் இந்த முன்மாதிரியைப் பின்பற்றி ஒவ்வொரு கிறிஸ்தவரும் "மரியாளை அவரவர் இல்லங்களில் ஏற்றுக்கொள்ள வேண்டும்" மற்றும் மீட்புப் பயணத்தில் அவளுடைய பாதுகாவலின் பங்கை அறிந்து தன்னுடைய அன்றாட வாழ்வில் ஒரு தனி இடத்தையும் அவளுக்கென்று ஒதுக்க வேண்டும்.

மூலம்:

John Paul II, *Devotion to Mary is based on Jesus' will*, in *L'Osservatore Romano*: Weekly Edition in English, 14 May 1997, p. 11.

# மாதாவின் சஞ்சலங்கள்

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

வலம்புரியாய் வானதூதர் முறையாக
வல்லச்செய்தி வாழ்த்துரைக்க
இளம்பிறையாம் மரியாவும் சரியாக
உளம்தனிலே ஏற்றிருக்க
இதோ! அடிமையென இறைவனுக்கே
இமைப்பொழுதே இசைந்துவிட்டார்
தாழ்ச்சியுற்ற அடியவரைத் தந்தையவர்
மாட்சிபெற உயர்த்திவிட்டார்
என்பதுவே எல்லாரும் எந்நாளும்
ஏற்றுகின்ற புகழ்மொழியாம் - ஆனால்
அன்னைமரி அவமானம் உற்றதையோ
அக்கம்பக்கம் உரைத்ததையோ
மறைவாக விலக்கிவிட முடிவெடுத்த
யோசேப்பின் நினைவினையோ
யூதச்சட்டம் முறைமைப்படி கூடிபலர்
யூகித்த செயல்களையோ
யாரிங்கே உணர்ந்திருப்பர்? தெளிவுபட
எவரிங்கே உரைத்திருப்பர்?

2

இயேசுபிரான் பிறந்தசேதி லோகமெல்லாம்
யோகமான போதகம்தான்
யாதுமொரு பேதமில்லை மேதினியில்
ஆளுக்கொரு பேச்சுமில்லை
விண்ணவர்கள் பண்ணிசைத்து வாழ்த்தினார்கள்
இடையர்கள் போற்றினார்கள்
ஞானியர்கள் தெண்டனிட்டு வணங்கினார்கள்
ஏரோதியர் தூற்றினார்கள்
வேதத்திலே இதைத்தானே படித்திருப்போம்
வாயாறவும் உரைத்திருப்போம் - ஆனால்
மாபரனார் அவதரிக்க பாமரனின்
மடம்கூட கிடைக்கவில்லை
மாதவளின் நிலைக்கண்டு பாழடைந்த
மாட்டடமே கிடைத்ததென்றால்
மற்றைய யாவனுமே மாமரிக்கு
மடையெனவா கிடைத்திருக்கும்?






3

பேறுகால வேளையிலே தேவையான
பிரதான உதவிக்கூட
கடவுளின் தாயவளாம் மரியாவுக்கு
கடுகளவும் கிடைக்கவில்லை
சுருக்கமாய் நினைத்தாலே போதும்
பெருக்கமாய் கண்ணீரேமோதும்
பிரசவ வேதனையில் துணைபுரிய
பிறசனம்யார் வந்திருப்பர்?
வயிற்றுப் பசிபோக்க உணவுகூட
வந்துயார் ஈந்திருப்பர்?
கந்தை துணிகூட குழந்தைக்கு
கடுக்காமல்யார் தந்திருப்பர்?
சங்கடமாய் உள்ளதன்றோ மாதாவின்
சஞ்சலங்கள் சஞ்சரிக்க?
வேதனையாய் உள்ளதன்றோ வண்ணமிகு
வார்த்தைகளில் வர்ணனிக்க?
இயேசுவின் பிறப்பினிலே மலையெனவே
இதுகாறும் இடர்களென்றால்
இன்னும்பிற நிகழ்வினிலே நேர்ந்ததெல்லாம்
இயம்பிடவே அலகுவுண்டோ?...



# செப உதவி





**அன்பார்ந்தவர்களே! ஆண்டோ திவ்யன் என்னும் இந்த 7 வயது சிறுவனுக்கு பேச்சுத்திறனையும் பகுத்தறியும் ஆற்றலையும் இறைவன் அளிக்க அன்னையின் வழியாக சிறப்பாக செபிக்க உங்களை வேண்டுகிறோம்.**

முகவரி: திருமதி. ஜெசிந்தா, 5/69, பாரதி நகர், திருப்பத்தூர்
தொடர்புக்கு: 9944322104